இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31,16 ஆகஸ்ட் 2024 இதழ்:- 11

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com


Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## இலங்கையின் தலையீடுகளால் ஒருபோதும் பின் வாங்க மாட்டோம் கனடிய அரசு வலுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்!



இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசாங்கத்தினால் எமது உள்ளக விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடுகளால் நாம் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் எனத் தெரிவித்திருக்கும் கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன், இத்தலையீடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கம் வலுவானதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகாரப் பகிர்வு குறித்து பேரம் பேசுவதே சிறந்த அணுகுமுறை சுமந்திரனிடம் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு!



இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பதற்கு முன்னர், அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் செல்வது குறித்து சகல வேட்பாளர்களுடனும் பேரம் பேசுவது சிறந்த அணுகுமுறை எனவும், இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.(3ம் பக்கம் பார்க்க)

## நாங்கள் யாரை ஆதரிப்போம் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை! அதற்கு இன்னமும் கால அவகாசம் இருக்கிறது என்கிறார் சுமந்திரன்!



நாங்கள் யாரை ஆதரிப்போம் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஆ. சுமந்திரன் தெரிவித்தார். 14 ஆகஸ்ட் 2024 புதன்ிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இன்று ஜனாதிபதி 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான விடயங்களை பலருடன் பேசிக் கொண்டு வருகிறார். 2022 ஆம் டிசம்பர் சகல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பித்த போது நான் அவருக்கு வழங்கிய ஆவணத்தில் இருந்து தொடர்ச்சியாக பல ஆவணங்கள் கை மாற்றப்பட்டு இப்பொழுது அவர் ஒரு ஆவணத்தை வழங்கியுள்ளார். (24ம் பக்கம் பார்க்க)

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representatives
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
21 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Simcoe St N. & Conlin Rd
Oshawa $275,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!
Danforth Ave & Victoria park
East York $410,000
1 Beds • 1 Bath • 4 Rooms
Fully Renovated unit
Neilson/Tapscott
Malvern $460,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC
Adelaide St & Simcoe St
Toronto $680,000
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC
Sheppard & Neilson
Malvern $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!
HWY 48 & High Street
Georgina $774,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Brand New Never Lived Home
McLevin Ave & Morningside
Malvern $799,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement
Mavis Rd / Eglinton Ave
Mississauga $859,000
3 Beds • 3 Baths • 8 Rooms
Finished Basement
Garner Rd E & Raymond Rd
Hamilton $899,999
3 Beds • 5 Baths • 10 Rooms
Hardwood flooring throughout
Church St N & Rossland Rd W
Ajax $950,000
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout
Townline Rd & Shankel Rd
Oshawa $1,099,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Finished Basementt
Bristol Rd / Terry Fox Way
Mississauga $1,119,999
3 Beds • 4 Baths • 9+1 Rooms
Easy commutes to the 401,403
Midland Ave/ Eglinton Ave
Scarborough $1,150,000
3 Beds • 2 Baths • 6+1 Rooms
Hardwood flooring throughout
Hwy 48/Castlemore
FOR LEASE
Markham $3,950
4 Beds • 3 Baths • 6 Rooms
1 Min to Mount Joy Go Train Station
Staines/Finch
FOR LEASE
Scarborough $3,700
4 Beds • 3 Baths • 7 Rooms
1 Min away to public school
Hwy 7/Warden
FOR LEASE
Markham $2,400
1+1 Bed • 2 Baths • 4+1 Rooms
Open concept layout
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையின் தலையீடுகளால் ஒருபோதும் பின் வாங்க மாட்டோம் கனடிய அரசு வலுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்!



இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசாங்கத்தினால் எமது உள்ளக விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடுகளால் நாம் ஒரு போதும் பின்வாங்க மாட்டோம் எனத் தெரிவித்திருக்கும் கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன், இத்தலையீடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கம் வலுவானதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களால் கனடாவின் பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கு மேற் கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி இலங்கையிலும், கனேடியவாழ் இலங்கையர்கள் மத்தியிலும் முன்னெடுக்கப் பட்டுவரும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் பாரிய பின்டைவை ஏற்படுத்தும் எனவும், ஆகவே இம்முயற்சிக்கு உதவ வேண்டாம் எனவும் வலியுறுத்தி பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு கனடாவின் டொரன்டோ நகரிலுள்ள இலங்கை கொன்சியூ லர் நாயகம் துஷார ரொட்ரிகோ கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.(கடிதத்தின் விபரம் 12ம் பக்கத்தில் உள்ளது)

இக்கடிதத்தின் உள்ளடக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் மேயர் பற்றிக் பிரவுன், 'எமது உள்ளக விவகாரங்களில் இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் படும் தலையீடுகளால் நாம் ஒரு போதும் பின்வாங்க மாட்டோம்' எனத் தெரிவித்துள்ளார்.

தமிழினப்படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய குற்றவாளிகளை இலங்கை அரசாங்கம் ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையளிக்கும் வரை உண்மையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பமுடியாது. இருப்பினும் இப்போர்க்குற்றவாளிகளை அவர்கள் இழைத்த மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறச் செய்வதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் அவர்களைப் பாதுகாத்து வருகின்றது' எனவும் மேயர் பற்ரக் பிரவுன் விசனம் வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கையில் தமிழ் மக்கள் அவர்களது அன்புக்குரியவர்களை நினைவு கூருவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தாலும், கனடாவில் அவர்களால் (இலங்கை அரசாங்கத்தினால்) அதனைச் செய்ய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு 'அவர்கள் கனடாவில் நினைவுகூரல் நிகழ்வைத் தடுப்பதற்கு முயன்றால் அது வெளிநாட்டுத் தலையீடாகவே அமையும்' எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அண்மையகாலங்களில் இலங்கை அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்டு வரும் வெளியக தலையீடு தொடர்பில் கனேடிய அரசாங்கம் வலுவான நிலைப்பாடொன்றை எடுக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகாரப் பகிர்வு குறித்து பேரம் பேசுவதே சிறந்த அணுகுமுறை சுமந்திரனிடம் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு!



இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பதற்கு முன்னர், அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் செல்வது குறித்து சகல வேட்பாளர்களுடனும் பேரம் பேசுவது சிறந்த அணுகுமுறை எனவும், இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கடந்த 14 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான வேட்பாளர்களுடன் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து பேசிய விடயங்களை சுமந்திரன் உயர்ஸ்தானிகரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

மூன்று பிரதான வேட்பாளர்களும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதாகக் கூறியிருக்கும் பின்னணியில், அதில் அமுல்படுத்தப்படாமல் இருக்கும் விடயங்கள், அவற்றை அமுல்படுத்துவதற்கு தற்போதைய ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளை உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவரிடம் (ரணில் விக்ரமசிங்கவிடம்) கையளித்த ஆவணம், 13 ஆவது திருத்தத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய விடயங்கள் குறித்து அண்மையில் ஜனாதிபதி கையளித்த ஆவணம் என்பன பற்றி உயர்ஸ்தானிகரிடம் விளக்கிக் கூறிய சுமந்திரன், அவரிடம் அந்த ஆவணத்தையும் காண்பித்தார்.

அதேபோன்று இந்திய – இலங்கை ஒப்பந்தம் குறித்தும், 13ஆவது திருத்தத்தில் இருந்த மற்றும் அதிலிருந்த எடுக்கப்பட்ட விடயங்கள் குறித்தும் விளக்கமளித்த சுமந்திரன், அவ்வாறு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளத் தருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியிருக்கும் நிலையில் அதற்கான நடைமுறைகள் பற்றியும் உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்தார்.

அதில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட நிர்வாக அதிகாரங்கள் மற்றும் 'திவினெகும' உள்ளடங்கலாக சட்டங்களின் ஊடாக பறிக்கப்பட்ட அதிகாரங்கள் பற்றி எடுத்துரைத்த சுமந்திரன், இவற்றில் நிர்வாக ரீதியாகப் பறிக்கப்பட்ட அதிகாரங்களை தற்போது வழங்குவதாக ஜனாதிபதி கூறியிருப்பதாகவும், அது செயல் வடிவம் பெறுவதை உறுதிப்படுத்துவதே தமது நோக்கம் எனவும் தெரிவித்தார். அதனை செவிமடுத்த உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, (14ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்குவோமென சிங்க மக்களுக்கு அறிவிக்கும் வேட்பாளருக்கு ஆதரவு!

வடக்கு கிழக்கில் சமஸ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்க தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம் என தமிழரசுக்கட்சி கலந்துரையாடியுள்ளதாக கட்சயின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் கட்சியின் மத்திய குழு கூட்டம் இடம் பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார், தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தமிழ் மக்கள் சார்பாக தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசுக் கட்சியினுடைய நிலைப்பாடானது இணைந்த வடகிழக்கிலே சமஸ்தி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறை ஏற்படுத்தப்படுவதாகும்.

இதுவே எங்களுடைய அரசியல் நிலைப்பாடு. இதற்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் யாராவது இணங்கி வந்தால் அவர்களுக்கு ஆதரவு அளிக்கலாம் என்ற கருத்தும் கூட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் இது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை. எமது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு நாம் கூறி இருப்பதானது, அவர்களுடைய அரசியல் அறிக்கையில் எவ்வாறான செய்தியை சொல்கிறீர்கள் என்று நாம் பார்க்கப் போகின்றோம்.

இது தொடர்பில் முழு நாட்டிற்கும் அவர்கள் எண்ணத்தை சொல்ல வருகிறார்கள் என்பது தொடர்பிலும் நாங்கள் பார்க்க இருக்கிறோம்.



எமது கோரிக்கைகளை ஏற்றால் அது தொடர்பில் விசேஷமாக சிங்கள மக்களுக்கு அவர்கள் தமிழர்களுக்கு எதைச் செய்யப் போகிறோம் என்பதையும் அறிவிக்க வேண்டும்.

இது தவிர நாங்களும் எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து வடிவில் தெளிவான ஒரு அறிக்கையாக வெளியிடுவோம். எங்களுடைய மக்களுக்கு மக்களுடைய அரசியல் தலைமைத்துவம் வழங்குகின்ற கட்சி என்ற நிலைப்பாட்டில் அவ்வாறான ஒரு பொறுப்பை நாமும் உதாசீனம் செய்யாமல் வழிகாட்டல் அறிக்கை ஒன்றை ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வெளியிடுவோம்.




தமிழ் பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவது என்று சில அரசியல் கட்சிகளும் சில சிவில் அமைப்புகள் என்று சொல்லுபவர்களும் செயற்படுகின்றனர்.

அதுவும் இன்றைய கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டது. இதற்கு முன்னரே இரண்டு கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி இருக்கிறோம். கடந்த கூட்டத்தில் அரியநேந்திரன் சமூகமாகி இருந்தார். அந்த கூட்டங்களிலேயே நாங்கள் இப்போது இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதில்லை என சொல்லியிருந்தோம். எங்களுடைய மக்களோடும் எங்களுடைய கட்சி உறுப்பினர்களோடும் தொடர்ந்து கலந்துரையாடுவது அவசியம் என்று கலந்துரையாடப்பட்டிருக்கிறது. எனினும் நாம் இதற்கு ஆதரவா எதிர்ப்பா என்று ஒரு தீர்மானமும் எடுக்கவில்லை.

ஆனால் இலங்கை தமிழரசு கட்சியினுடைய மத்திய குழு உறுப்பினராகிய அரியநேந்திரன் கட்சியுடன் உரையாடாமல் தன்னை தமிழ் பொது வேட்பாளராக அறிவித்தமை சம்பந்தமாக அவரிடம் விளக்கம் கூறுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவருடைய விளக்கத்தை கட்சிக்கு சொல்வதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுகிறது. அதுவரைக்கும் கட்சி நிகழ்வுகள் எதிலும் அவருக்கு அழைப்பு அனுப்புவதில்லை என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.




## கனடா – அருள்மிகு
## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



**அம்பாள் அடியார்களே!**

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக் கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# ஆக்கிரமிப்பாளனுக்கு தண்டனை வழங்குவது தேசத்தின் உரிமை! இஸ்ரேல் மீது தாக்குதலை மேற்கொள்வதை நியாயப்படுத்திய ஈரான்!

ஹமாஸ் தலைவரை கொலை செய்தமைக்காக இஸ்ரேலிற்கு எதிராக பதில் தாக்குதலை மேற் கொள்ள வேண்டும் என ஈரான் சிந்திப்பது சரியான விடயம் என அந்த நாட்டின் ஜனாதிபதி மசூட் பெசெஸ்கியான் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஸ் பிரதமர் கெய்ர் ஸ்டா மெருடனான தொலைபேசி உரை யாடலின் போது ஈரான் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். ஆக் கிரமிப்பாளனுக்கு தண்டனை வழங்குவது ஒரு தேசத்தின்



உரிமை என தெரிவித்துள்ள ஈரான் ஜனாதிபதி இவ்வாறான நடவடிக்கை குற்றங்களை ஆக்கி ரமிப்பை நிறுத்துவதற்கு தீர்வு எனவும் தெரிவித்துள்ளார்.

காசாவிலும் வேறு பகுதிகளிலும் இஸ்ரேலின் முன்னொருபோதும் இல்லாத மனிதாபிமான குற்றங்கள் குறித்த மேற்குலகின் மௌனம் பொறுப்புணர்வற்றது என தெரி வித்துள்ள ஈரான் ஜனாதிபதி இஸ்ரேலின் இந்த நடவடிக்கை பிராந்திய சர்வதேச பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நட வடிக்கைகளில் இஸ்ரேல் ஈடுபடு வதற்கு தூண்டுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

# தமிழரசுக்கட்சியை வழிக்குக் கொண்டு வரவே அரியநேத்திரன் தெரிவு - செல்வம் புதுவிளக்கம்

கட்சி சாரா பெண்மணியொரு வரையே பொது வேட்பாளராக களமிறக்கவுள்ளதாக தெரிவித்து வந்திருந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பின் பொது வேட்பாளராக இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவு செய்யப்பட்டமை வாதப் பிரதி வாதங்களை தோற்றுவித்து வரு கின்றது.

இந்நிலையில் தமிழரசு கட்சியை பொது வேட்பாளர் விடயத்தில் எமது வழிக்கு கொண்டு வரும் ஒரு உத்தியாகவே அரியநேத்திரன் களமிறக்கப் பட்டதாக நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடை க்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளராக அரசியல் கட்சி சார்பற்ற ஒருவர் நியமிக்கப் படுவார் என ஆரம்பத்தில் கூறப் பட்டது. ஆனால் இறுதியில் தமிழ ரசு கட்சியின் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் தமிழ் மக்கள் தமிழ் அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் ஒற்றுமையினை எதிர்பார்க்கின்றார்கள். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று அவர் கள் விரும்புகின்றார்கள். ஆனால், எங்களிடம் அது இல்லாதிருப்பது கவலைக்குரியது.

இந்நிலையில் தமிழ் பொது வேட



பாளராக தமிழரசு கட்சிக்குள் இருந்து ஒருவரை தெரிவு செய்தி ருப்பது என்பது தமிழரசுக் கட்சியை வழிக்கு கொண்டு வரும் உத்தியாகவே நான் கருது கின்றேன் என செல்வம் அடைக் கல நாதன் தெரிவித்துள்ளார்.

# பொதுவேட்பாளரை நிறுத்தி விட்டு தென்னிலங்கை தலைவர்களைச் சந்திப்பது துரோகச் செயல் -கஜன்



பொது வேட்பாளரை ஒருவரை முன்னிறுத்தியிருக்கும் நேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடம் 13வது திருத்தச் சட்டம் பற்றி பேச்சு நடத்தியிருப்பது மக்களுக்கு செய்யும் துரோகம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித் தார்.

வவுனியாவில் 13 ஆகஸ்ட் 2024 ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போது அவர் இதனை தெரி வித்தார். மேலும் கருத்து தெரி வித்த அவர்

பொதுவேட்பாளர் என்பது என் னைப் பொறுத்தவரை திட்டமிட்ட நாடகம். பொதுவேட்பாளர்களை முன்னிறுத்திய சிவில் அமைப்பு க்களும், கட்சி சார்ந்தவர்களும் கடந்த 15 வருடங்களாக ஒற்றை யாட்சிக்குள் 13ம் திருத்தச் சட்ட த்தை திணிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு முழுமையாக உறுதுணையாக செயற்பட்டவர் கள்.

குறிப்பாக விக்னேஸ்வரன், செல் வம் அடைக்கலநாதன், சித்தார்த் தன் ஆகியோர் இந்தியாவின் கைக் கூலிகள். இவர்கள் கடந்த காலங் களில் 13வது திருத்தச் சட்ட த்தை தீர்வாக வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடித ங்களை அனுப்பியவர்கள்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினை வலியுறுத்திய தரப்புக்கு விளைவு கள் ஏற்படாமல் இருப்பதற்கும், மக்கள் மத்தியிலிருந்து வேறு படாமலிருப்பதற்காகவும் அவர் களை பேணி பாதுகாத்து தொட ர்ந்தும் மக்களை அவர்களுடன் வைத்திருப்பதற்கான செய்பாடு களே முன்னெடுக்கப்படுகின்றன.

பொது வேட்பாளர் என்ற ஒரு வரை நிறுத்தி விட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித் திருக்கின்றனர். குறிப்பாக செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார் த்தனிற்கு விசேட நிதி வழங்கப் பட்டுள்ளது.

இதில் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனிற்கு யாழ் மாவ ட்டத்திற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு ள்ளது. மேலும் இவருடைய அடிமையாக இருக்கக்கூடிய வரும் இந்தியாவின் கைக்கூலியாக இருக்கின்ற சுரேன் குருசாமி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியினை சார்ந்தவர்களும் குறித்த சந்திப்பிற்கு சென்றிருக் கிறார்கள்.

மேலும் இச்சந்திப்பின் போது 13- வது திருத்தச் சட்டத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பான வாக்குறுதியினை பெற்றுக் கொண்டு வந்திருக்கின்றனர். இவர்கள் செய்தது பச்சை துரோக மான செயலாகும்.

இவர்கள் இந்தியாவின் நலனை பேணக்கூடிய நபர்களுக்கு வாக்கு களை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையிலும் தமிழர்கள் இந்த ஆட்சியாளர்களின் மீது அதிருப்தி அடைந்து, ஏமாற்று வேலையை புரிந்து கொண்டு தேர்தலைப் புறக்கணித்து தேர்தலில் ஒதுங்கி இருக்கின்ற நிலைமைக்கு சென்று விடக்கூடாது என்பதற்கான நாட கம் தான் பொது வேட்பாளர்.

தற்போது பொதுவேட்பாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள அரிய நேத்திரன் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவிருந்து சம்மந்தர் சுமந்திரனோடு இணை ந்து, குறிப்பாக சுமந்திரனின் அனைத்து துரோகமான செயற் பாடுகளுக்கும் முழுமையாகத் துணை நின்றவர்.

2012 ஆம் ஆண்டு ஜெனிவா உள்ளக விசாரணையின் போது சுமந்திரனுடைய முழு துரோக மான செயற்பாடுகளுக்கும் துணை நின்றவர். மஹிந்த ராஜ பக்ச, கோட்டபய ராஜபக்ச மற்றும் இராணுவ தளபதிகளிற்கு எதிராக சர்வதேச விசாரணை இடம்பெறா மல் தடுத்து உள்ளக விசாரணை என்ற போர்வையில் இலங்கையை மீட்டெடுக்கின்ற விடயங்களுக்கு அவர்களிற்கு முழுமையாக துணை நின்றார்கள் என்றார்.

# இந்தியா எதனைப் புரிந்து கொள்கின்றது?

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந் திரனை சந்தித்திருக்கின்றார். இந்த சந்திப்பு சுமந்தி ரனின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெற்றதா அல்லது தூதுவரின் அழைப்புக்கு அமைவாக நடைபெற்றதா என்ற விவரங்கள் வெளிவரவில்லை.

சுமந்திரன் சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக் கான சீனத் தூதுவரையும் சந்தித்துக் கலந்துரை யாடியிருந்தார். சீனத் தூதுவர் அழைத்திருந்தாரா அல்லது சுமந்திரனின் கோரிக்கையின் பெயரில் இடம் பெற்றதா தகவல்கள் வெளியாகவில்லை.

இந்திய தூதுவரின் சந்திப்பின் போது, அவர் கூறி னார் என்று ஊடகங்கள் சில விடயங்களை வெளி யிட்டிருக்கின்றன. இனவாதம் தலையெடுக்காத இந்த சந்தர்ப்பத்தில்தான் அனைத்துத் தென்னில ங்கை வேட்பாளர்களுடனும் திறந்த மனதுடன் பேசலாம் — அனை வருடனும் திறந்த மனதுடன் பேசுங்கள். அவர்களின் கருத்துகளை அறியுங்கள் என்று தூதுவர் குறிப்பிட்டாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சீனத் தூதுவருடனான சந்திப்பைத் தொடர்ந்து தான் இந்திய தூதுவருடனான சந்திப்பு நடை பெற்றுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வில் இந்தியாவின் பங்கு இன்றிமையாதது. இந்தியாவின் தயவும் கரிசனை யும் எப்போதும் தேவையானவை. எனவே, இதனை மீண்டும் இங்கு வலியுறுத்தி சொல்ல வேண்டிய தில்லை.

ஆனால், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை க்கான தீர்வில் சீனாவின் பங்கு என்ன? அப்படியான ஓர் இடம் சீனாவுக்கு வரலாற்று ரீதியாக இருந்த தில்லை. சீனாவை பொறுத்தவரையில் இலங்கை என்பது ஒரு பௌத்த பூ மி (Land of Budd hism).

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வ தாகக் கூறிக் கொள்ளும் ஒரு கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் எதற்காக சீனத் தூதுவரை சந்திக்க வேண்டும்? வடக்கு கிழக்குக்குள் சீனா உள்நுழைவதை தாம் எதிர்ப்பதாக பல்வேறு சந்த ர்ப்பங்களில் தமிழ் அரசுக் கட்சியினர் கூறியிருக் கின்றனர்.

அவ்வாறாயின், தேர்தல் காலத்தில் எந்த அடிப் படையில் சீனத் தூதுவரை சந்திக்க முடியும்? ஒருவேளை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் தான் சீனத் தூதுவருடன் பேசப்பட் டது என்றால் என்ன பேசப்பட்டது? தமிழ் மக்களின் பிரச்னைக்குள் மூக்கை நுழைக்கும் வாய்ப்பை சீனாவுக்கு வழங்கினால் வடக்கு கிழக்குக்குள் வாருங்கள் என்பதற்கான செங்கம்ப ளம் விரிக்கப்படுகின்றது என்பது தானே அதன் பொருள்.

இந்த விடயத்தை இந்தியத் தூதரகம் எவ்வாறு புரிந்து கொள்கின்றது? தமிழ்த் தரப்புகள் சீனத் தூதுவரை தேர்தல் காலத்தில் சந்திப்பதானது சீனாவை வடக்கு கிழக்குக்குள் வாருங்கள் தமிழ் மக்களின் பிரச்னைக்குள் மூக்கை நுழையுங்கள் என்பதற்கான அழைப்பிதழ் தான்.

இவ்வாறான நகர்வுகளை மேற்கொள்பவர்களுக்கு இந்தியத் தூதரகம் முக்கியத்துவம் வழங்குமாயின் எதிர் காலத்தில் இன்னும் பலர் சீனத் தூதரகத்தை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாமல் போகலாம்.

ஏனெனில், இந்தியா கோபித்து விடக் கூடாது, என்னும் காரணத்தால் தான் வடக்கு — கிழக்கை சேர்ந்த பலரும் சீனத் தூதரகத்திலிருந்து சற்று எட்ட நிற்கின்றனர். ஆனால், தற்போது வலிந்து சீனாவை நோக்கிச் செல்லும் சுமந்திரனுக்கு இந்தியத் தூதரகம் அதிக முக்கியத்துவத்தை வழங்குவதாகத் தெரிகின்றது.

இன்றைய தமிழர் அரசியல் சூழலை பொறுத்த வரையில் குறிப்பாக, தமிழ் அரசு கட்சிக்குள் சுமந்திரன் எதிர்ப்பு ஒரு பிரதான அரசியலாக இருக்கின்றது. இந்த நிலையில், சுமந்திரன் சீனத் தூதுவரை சந்தித்தமை ஒரு முன்னுதாரணமாக ஏனையவர்களும் எடுத்துக் கொள்ள அதிக வாய்ப்பு உண்டு.

# சட்டமாஅதிபருக்கு அப்பால் சுயாதீன சட்டவாதியை நியமிப்பது ஆட்சி நிர்வாகப் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் - மனிதஉரிமைகள் கண்காணிப்பகம்

பொறுப்புக்கூறல் சார்ந்த செயற்பாடுகளை அரசாங்கத்தின் ஓரங்கமாகவுள்ள சட்டமா அதிபரிடம் கையளிப்பதை விட, சுயாதீன சட்டவாதி ஒருவரை நியமிப்பதானது ஆட்சி நிர்வாகத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் மிகமுக்கிய நகர்வாக அமையும் என மனித உரிகைள் கண்காணிப்பகத்தின் ஆசியப்பிராந்திய பிரதிப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி சுட்டிக் காட்டியுள்ளார்.




எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பில் உள்நாட்டு சஞ்சிகையொன்றின் கட்டுரையில் மீனாக்ஷி கங்குலி மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இராணுவத்தினரால் இழைக்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்படும் போர்க்குற்றங்கள் குறித்து அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதை முன்னிறுத்தி விசாரணைகளை முன்னெடுப்பதை அரசாங்கம் தொடர்ச்சியாகக் காலந்தாழ்த்தி வந்திருக்கிறது.

நம்பத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ் சாட்டப்பட்ட சிலர் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். இவ்வாறு பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்துவதில் நிலவிய குறைபாடு ஆட்சி நிர்வாகத்தின் சகல பகுதிகளுக்கும் வியாபித்தது. வன்முறைப் போக்கு, ஊழல் மோசடிகள் மற்றும் நிர்வாகத்திறனின்மை என்பன அரச வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், தீவிர பொருளாதார நெருக்கடிக்கும் தோற்றுவாயாக அமைந்தது. மனித உரிமை மீறல் சம்பவங்களில் அரசியல்வாதிகளோ அல்லது பாதுகாப்புத் தரப்பினரோ தொடர்புபட்டிருப்பதாகக் கண்டறியப்படும் வேளையில், அது குறித்த சுயாதீன விசாரணைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. எனவே நாட்டின் நீதித்துறையில் நிலவும் அரசியல் தலையீடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொறுப்புக்கூறல் சார்ந்த செயற்பாடுகளை அரசாங்கத்தின் ஓரங்கமாகவுள்ள சட்டமா அதிபரிடம் கையளிப்பதை விட, சுயாதீன சட்டவாதி ஒருவரை நியமிப்பதானது ஆட்சி நிர்வாகத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் மிகமுக்கிய நகர்வாக அமையும்.

அதே போன்று அரசியல்வாதிகள் எதேச்சதிகாரிகளாக மாறுகையில், அவர்கள் தமது ஊழல் மோசடிகள் மற்றும் குற்றங்களை மறைத்து, தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக ஏனைய கட்டமைப்புக்களை 'வளைத்து' விடுவார்கள். எனவே முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்து வலுப்படுத்துவதற்கு, அதற்குரிய அரசியல் தன்முனைப்பு இன்றியமையாததாகும். குறிப்பாக அண்மையில் கொண்டு வரப்பட்ட ஊழல் எதிர்ப்புச்சட்டம் எழுத்து வடிவில் மிகச் சிறந்ததாக இருப்பினும், உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதனை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

மேலும் அரசாங்கத்தைப் பொறுப்புக் கூறச் செய்வதற்கு சிவில் சமூகங்கள் முயற்சித்த மிக நீண்ட வரலாறு இலங்கைக்கு உண்டு. அவ்வாறிருக்கையில் தற்போது அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் முன் மொழியப்பட்டிருக்கும் சட்டமூலம் சிவில் சமூகங்களின் நிலைத்திருப்புக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும், ஆர்ப்பாட்டங்களையும் ஒடுக்குவதற்குப் பதிலாக நாட்டுமக்கள் அனைவரினதும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

**மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாக வெளியாகும் உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**23 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**
**தொடர்புகளுக்கு 416 841 9600**
**வாரம் தோறும் மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்**


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)

Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12

Special Classes for IB, AP & University Students

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# அரச சலுகைகள் ரத்துச் செய்யப்படும் என்ற ஏக்கத்தில் ரணிலைச் சந்தித்த த.பொ.க.வினர்



தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கிய சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று 12 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் அதன் தலைவர் வேந்தன் மற்றும் செயலாளர் துளசி ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கிய சூழலிலே, இந்த சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான அழைப்பினை தனித் தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் இந்த அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும் ரணில் விக்ரமசிங்க, தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்காக முன்னெடுக்க உள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பில் பங்கேற்பதென முடிவு செய்தனர்.

இச் சந்திப்பில், பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான சமஸ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருப்பதனாலேயே பொது வேட்பாளர் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட்டது. ஜனாதிபதி தரப்பில் சமஸ்டி முறையான அரசியல் தீர்வு என்பது பலம் மிக்க பாராளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது சம்பந்தமாக பரிசீலித்து முன்னேற்றகரமான முடிவுகளை எதிர் காலத்தில் எட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் அதற்காக தன்னிடம் தயாரித்து வைக்கப் பட்டிருக்கும் யோசனைகளடங்கிய ஆவணம் ஒன்றையும் சமர்ப்பித்தார். ஏற்கனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாண சபை கொண்டிருக்கும் எனக்கும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவதாகவும் ஏற்கனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புகளை மேற் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கு முகமான மேலதிக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தமது தரப்பிலும் தயாராக இருப்பதாக சொல்லிய தமிழ் தரப்பினர், அவரால் சமர்ப்பிக்கப் பட்ட ஆவணம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து கருத்து தெரிவிப்பதாக கூறியதுடன் சந்திப்பு நிறைவடைந்தது.

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை சந்தித்த தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பினர்!



தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கிய சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து பேச்சு நடத்திய நிலையில் 13 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவின் அழைப்பை ஏற்று காலை 7.30 மணியளவில் எதிர்க் கட்சி அலுலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மற்றைய தரப்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் வட மாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளரைக் களமிறக்கவுள்ள நிலையிலேயே வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக சஜித் பிரேமதாச, பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான அழைப்பினை தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள்

(22ம் பக்கம் பார்க்க)

# தெற்குடன் பேசுதல்!

தேர்தல் களம் மிகவும் நெருக்கடிமிக்கதாக மாறி வருகின்றது. யாரை யாரால் தோற்கடிக்க முடியும் முடியுமா என்னும் கேள்விகளுடன் தினமும் நிலைமைகள் மாற்றமடைகின்றன. ரணில் வியூகங்களின் மீது நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றார்.

அவரது வியூகங்கள் அவரை பல முறை கைவிட்டிருக்கின்ற போதிலும் கூட அவர் நம்பிக்கையுடன் நகர்கின்றார்.

மறுபுறம், சஜித் பிரேமதாச தான் தான் வெற்றியாளர் என்னும் நிலைப்பாட்டில் பயணம் செய்கின்றார். அனுரகுமார திஸ்ஸநாயக்க தென்னிலங்கை மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்படும் என்னும் நம்பிக்கையுடன் இருக்கின்றார். ஆனால் எவர் வெற்றி பெற வேண்டும் என்றாலும் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் ஆதரவு கட்டாயமானது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் பிரதான போட்டியாளராக ரணிலும் சஜித்துமே இருப்பதாக தெரிகின்றது. ஏனெனில், அனுரகுமாரவைப் பொறுத்தவரையில் அவரால் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள முடியாது. அந்தளவிற்கு ஏனைய சமூகங்களுடன் அவர் நெருங்கிச் செயல்பட்ட ஒருவரல்ல. எனவே அனுரவின் வெற்றிவாய்ப்பு மிகவும் குறைவானதாகவே தெரிகின்றது.

ஒருவேளை, 2019இல் ஏற்பட்டது போன்றதோர் எழுச்சி ஏற்பட்டு பெரும் பான்மையான சிங்கள மக்கள் அனுரவின் பக்கம் திரும்பினால் மட்டும் தான், அவ்வாறானதோரு அதிசயம் நிகழக்கூடும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளின் வெற்றிக்கு அவசியமானது வெற்றியை நிர்ணயம் செய்யக் கூடியது. இவ்வாறானதோரு பின்புலத்தில் தான் தமிழ் பொது வேட்பாளர் தென்னிலங்கையால் உற்று நோக்கப்படுகின்றார்.

ஆரம்பத்தில் இது தமிழ் மக்களின் உரிமையென்று கூறிய மனோ கணேசன் போன்றவர்கள் கூட தற்போது தடம்புரள முற்படுகின்றனர். காரணம், தமிழ் பொது வேட்பாளரை நோக்கி, தமிழ் மக்கள் திரும்பி விடுவார்களோ என்னும் அச்சம் மெதுவாக தொற்றிக் கொள்வதாகவே தெரிகின்றது.

இந்தப் பின்புலத்தில் தெற்குடன் பேசினால் என்ன என்றவாறான எண்ணப்பாங்கும் தமிழ்தேசியத்தை முன்னிலைப்படுத்தும் கட்சிகள் மத்தியில் அரும்புவதாகவே தெரிகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்திருக்கும் தமிழ் பொதுக் கட்டமைப்பு தெற்கின் கவனத்தை பெற்றிருக்கின்றது.

ஆனால், தெற்குடன் பேசினால் என்ன என்னும் நிலைப்பாடு தவறானதல்ல. ஆனால், ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் தமிழினத்தை கொழும்பின் மேசைக்கு அழைக்கலாம் என்னும் மனோபாவத்திற்கு இடமளிக்கக் கூடாது. அது தமிழினத்தை ஒரு மிகவும் பலவீனமான இனமாகவே காண்பிக்கும்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான காலப்பகுதியில் பல பேச்சு மேசைகளை தமிழினம் கண்டிருக்கின்றது. ஆனால், பதினைந்து வருடங்கள் எவ்வித முன்னேற்றங்களையும் தராமலேயே கடந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஒரு தொலைபேசி அழைப்புப் பேச்சு மூலம் மாற்றங்கள் வந்துவிடப் போவதில்லை. அவ்வாறு வருமென்று எவரேனும் எண்ணினால் அவ்வாறு எண்ணுபவர்கள், ஒன்றில் அரசியல் கற்றுக்குட்டிகளாக இருக்கின்றனர் அல்லது தங்களின் சுயநல நிகழ்ச்சி நிரல்களுக்கு முன்னுரிமையளிப்பவர்களாக இருக்கின்றனர்.

ஏனெனில் தெற்குடன் பேசுதல் என்பதற்கு நீண்ட வரலாறுண்டு. இதே வேளை தெற்குடன் பேசி வெறுங் கையுடன் திரும்பும் தமிழ் தலைவர்கள் என்போரின் கதையும் மிகவும் நீண்டது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் மீண்டும் வெறுங் கையுடன் திரும்புவதற்காக பேச வேண்டியதில்லை. தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்னும் முடிவு இந்தளவு அதிர்வலைகளை ஏற்படுத்துமானால் அந்த வேட்பாளர் பெறும் வாக்குகள் தெற்கின் கொள்கை நிலைப்பாடுகளிலும் நிச்சயம் மாற்றங்களை ஏற்படுத்தும்.

எனவே, அவ் வாறான மாற்றங்களுக்கான வாய்ப்பை வழங்கும் வகையில் செயல்படுவதே இன்றைக்கு தேவையானது. பேசும் அவசரத்தில், தமிழ் கட்சிகள் அஷ்டாங்க நமஸ்காரத்தில் சங்கமாகி விடக் கூடாது.

# அனைவரையும் உள்ளடக்கிய பொறுப்புக்கூறத்தக்க செயன்முறையே மறுசீரமைப்புக்களின் மையப்புள்ளி - ஐ.நா.

அனைவரையும் உள்ளடக்கியதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக்கூறலை உறுதி செய்யக் கூடியதுமான செயன்முறையின் ஊடாக நாட்டுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே மறுசீரமைப்புக் களின் மையப்புள்ளியாக அமைய வேண்டும் எனவும், நாடு மீண்டும் நெருக்கடிக்குள் சிக்குவதைத் தடுப்ப தற்கு ஆட்சி நிர்வாக சவால்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசூஸா குபோட்டா வலியுறுத்தி யுள்ளார்.

ஆட்சி நிர்வாகம் சார்ந்து இலங்கை தற்போது முகங் கொடுத்திருக்கும் சவால்கள் எவையென எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அசூஸா குபோட்டா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது,

நாட்டின் ஆட்சி நிர்வாகம் என நோக் குகையில் நாட்டுமக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய சமூகக்கட்டமைப்புக் களை வலுப்படுத்துவதற்கும், மீளக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கொவிட் 19 பெருந்தொற்றின் பின்னர் உலகளாவிய ரீதியில் மக்களுக்கும் அரச கட்டமைப்புக்களும் இடையி லான அவநம்பிக்கை படிப்படியாக வலுவடைந்து விட்டது. இலங்கை யிலும் கொவிட் 19 பெருந்தொற்றுப் பரவலை அடுத்து தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் இவ்வாறான போக்கை அவதானிக்க முடிகின்றது.



உலகளாவிய ரீதியில் மிகவும் சவாலான பிரச்சினையாக மாறிவரும் காலநிலை மாற்ற சவாலுக்கு உரியவாறான நிலை யான தீர்வை வழங்குமாறு மக்கள் அவர்களது தலைவர்களிடம் கோரு கின்றனர்.

2024ஆம் ஆண்டில் காலநிலை மாற் றம் தொடர்பில் மக்கள் அளித்த வாக்குகளின் பெறுபேறுகள் அண்மை யில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தினால் வெளியிடப்பட் டன. அதற்கமைய இலங்கையில் 97 சதவீதமானோர் காலநிலை மாற்ற சவா லைக் கையாள்வதற்குரிய கடப் பாட்டை அரசாங்கம் மேலும் வலுப் படுத்த வேண்டும் எனக் கருதுகின்ற னர்.

அனைவரையும் உள்ளடக்கியதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக்கூறலை உறுதி செய்யக் கூடியதுமான செயன்முறையின் ஊடாக நாட்டுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே மறுசீரமைப்புக் களின் மையப்புள்ளியாக அமைய வேண்டும்.

நிதியியல் கொள்கைத் தீர்மானங்கள் வரி வருமான வீழ்ச்சிக்கும், மிக உயர்வான பொதுத்துறை செலவின ங்களுக்கும், ஏற்றுமதிகளின் சுருக்கத் துக்கும், கடன் ஸ்திரத்தன்மை சீர்குலைவுக்கும் வழிவகுத்ததுடன், நாட்டை பாரிய பின்னடைவுக்குள் தள்ளியது. எனவே நாடு அந்நெருக் கடிக்குள் மீண்டும் சிக்குவதைத் தடுப்பதற்கு ஆட்சி நிர்வாகத்துடன் தொடர்புடைய சில சவால்களில் அவதானம் செலுத்தப்படவேண்டும்.

அதேபோன்று வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும் என வலியுறுத்தியுள் ளார்.

## கலைஞருக்கு நாணயம் வெளியீட்டு விழா

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றா ண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியிடும் நிகழ்ச்சி தமிழக அரசு சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ் நாத்சிங் பங்கேற்று கலைஞர் நூற்றாண்டு நினைவு நாண யத்தை வெளியிட்டு சிறப்புரையாற்றவுள்ளார் எனத் தெரி விக்கப்படுகினறது.

இந்த விழாவில் கூட்டணி கட்சித் தலைவர்கள் மட்டு மின்றி எதிர்க்கட்சித் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் ஆகியோரும் பங்கேற்க முதலமைச்சர் விரும்புகிறார்.அதன் அடிப்படையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னாள் முதலமைச்சர்




ஓ.பன்னீர்செல்வம், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, நடிகர் ரஜினி, கமல் உள்ளிட்ட திரையுலக பிரபலங்களுக்கும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இம்முறை மும்முனைப் போட்டியா? நான்கு முனைப் போட்டியா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களின் பொது வேட்பாளராகக் களம் இறக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் ராஜபக்சக்களின் வேட்பாளராக களமிறங்குவதை விடவும் ராஜபக்சக்களின் ஆட்களுக்கு தான் தலைமை தாங்குவது என்று முடிவெடுத்து விட்டது போல் தெரிகிறது. ரணில் ராஜபக்சக்களின் கட்சியைச் சாப்பிடத் தொடங்கி விட்டார். கட்சியைக் காப்பாற்றவும் ரணிலுடன் தமது பேரத்தைப் பலப்படுத்தவும் இளைய ராஜபக்சவாகிய நாமல் களமிறக்கப்படுகிறாரா? அவர் இக்கட்டுரை எழுதப்படும் வரையிலும் கட்டுப் பணம் செலுத்திதியிருக்கவில்லை.





ராஜபக்சக்களின் வேட்பாளராக களம் இறங்கினால் தனக்கு பின்வரும் பிரதிகூலங்கள் உண்டு என்பது ரணிலுக்கு நன்றி தெரியும்.

முதலாவது, அவர் ராஜபக்சகளோடு சேர்த்து பார்க்கப்பட்டால் மேற்கு நாடுகள் அவரிடம் இருந்து சிறிது விலகித் தான் நிற்கும். ஏன் என்றால் மேற்கு நாடுகளும் இந்தியாவும் ராஜபக்சவை ஒரு விருப்ப தெரிவாகப் பார்க்கவில்லை. தவிர பன்நாட்டு நாணய நிதியமும் அப்படித் தான் சிந்திக்கின்றது. அனைத்துலக அளவில் ராஜபக்சக்கள் இப்பொழுதும் விருப்பத் தெரிவாக இல்லை. சீன விரிவாக்கத்தின் கருவிகளாகவே பார்க்கப்படுகிறார்கள்.

மிகக் குறிப்பாக கடந்த வாரம் பங்களாதேஷில் இந்தியாவுக்கு அதிகம் இணக்கமான அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு விட்டது. ஏற்கனவே மாலைதீவுகளில் இந்தியாவின் பிடி, பலவீனமடைந்து விட்டது. பங்களாதேஷிலும் நிலைமைகள் நிச்சயமற்றவைகளாகவே தெரிகின்றன. எனவே இந்தியா இலங்கையில் மீண்டும் சீன விரிவாக்கத்துக்கான வாய்ப்புகள் அதிகரிப்பதை விரும்பாது.

இப்படிப் பார்த்தால் ராஜபக்சகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு ஜனாதிபதியை இந்தியா விரும்பாது. அமெரிக்கா விரும்பாது. மேற்கு நாடுகள் விரும்பாது. பன்னாட்டு நாணய நிதியமும் விரும்பாது. உலக வங்கியும் விரும்பாது.

இரண்டாவது பிரதிகூலம், ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து துரத்திய மக்கள் போராட்டக்காரர்கள் இப்பொழுது தேர்தல் கேட்கின்றார்கள். அவர்கள் தேர்தலில் பெரு வெற்றி பெறப் போவதில்லை. எனினும் சில ஆண்டுகளுக்கு முன் மக்களால் துரத்தியடிக்கப் பட்டவர்களின் பொது வேட்பாளராகக் களம் இறங்கினால் படித்த சிங்கள இளையோரின் வாக்குகளை இழக்கக்கூடிய ஆபத்து அதிகரிக்கும்.

மூன்றாவது பிரதிகூலம், ரணில், ராஜபக்சக்களோடு சேர்த்துப் பார்க்கப்பட்டால் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். முஸ்லிம்களும் பெரிய அளவில் ஆர்வம் காட்ட மாட்டார்கள். எனவே ராஜபக்சக்களிடம் இருந்து விலகி நிற்பதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்று ரணில் எதிர்பார்க்கிறார். பொருளாதார நெருக்கடியில் இருந்து அவர் நாட்டை மீட்டிருக்கிறார் என்று ஆங்கிலம் பேசும் படித்த நடுத்தர வர்க்கும் நம்புகின்றது என்று ரணில் நம்புகின்றார். ராஜபக்சக்களிடம் இருந்து விலகி நின்றால் தமிழ் முஸ்லிம் வாக்குகளையும் அதிகமாகச் சேகரிக்கலாம் என்று அவர் கணக்குப் போடுகிறார். அதனால் தான் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வருகிறார். முன்பு சஜித்துக்கு தமிழ் வாக்குகளைச் சாய்த்துக் கொடுக்கத் திட்டமிட்ட தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தன்னை நோக்கித் திரும்பலாம் என்ற எதிர்பார்ப்பு அவரிடம் உண்டு.

இனி வரும் நாட்களுக்குள் மேலும் புதிய சேர்க்கைகளுக்கும் விலகல்களுக்கும் கட்சித் தாவல்களுக்கும் வாய்ப்புகள் அதிகமாகத் தெரிகின்றன. இப்பொழுதும் ரணிலின் ஆட்பலம் ராஜபக்சகளின் கட்சியில் இருந்து கழட்டி எடுக்கப்பட்டவர்கள் தான். ஒற்றை யானையாக நாடாளுமன்றத்துக்குள் வந்தவர் இப்பொழுது 90க்கும் அதிகமான தாமரை மொட்டுக்களைப் பிடுங்கி எடுத்து விட்டார். இன்னும் எத்தனை பேரைப் பிடுங்கி எடுப்பார்? வேறு எந்த எந்தக் கட்சிகளில் இருந்து பிடுங்கி எடுப்பார்? என்பவையெல்லாம் இனிவரும் நாட்களில் தெரியவரும்.





பல்வேறு கட்சிகளின் பொது வேட்பாளராக அவர் மேலெழுந்தாலும் அவருடைய அடிப்படைப் பலம் தாமரை மொட்டுக் கட்சி தான். பொருளாதார நெருக்கடியில் இருந்து அவர் நாட்டை மீட்டதாகக் கருதும் நடுத்தர வர்க்கத்தின் வாக்கு தீர்மானகரமானது அல்ல. எனவே இப்பொழுதும் ரணிலின் பலம் ராஜபக்சக்கள் தான். ஆனால் ராஜபக்சக்களை வெளியே தள்ளி விட்டு அவர் ராஜபக்சக்களின் ஆட்களைத் தன் வசப்படுத்தி விட்டார். வெளித் தோற்றத்துக்கு அவர் ராஜபக்சகளோடு இல்லை என்று தோன்றலாம். ஆனால் அவருடைய அடிப்படைப் பலமே ராஜபக்சக்களின் கட்சி தான்.

அது ராஜபக்சகளின் தந்திரமாக இருக்கலாம் என்ற ஊகமும் உண்டு. ரணிலை வெற்றி பெற வைப்பதற்காக அவர்கள் அவ்வாறு ஒதுங்கி நிற்பதாகவும் சில ஊடகவியலாளர்கள் ஊகிக்கின்றார்கள். ஆனால் அப்படி ஒரு தந்திரத்துக்காக தமது கட்சியைப் பலியிட ராஜபக்சக்கள் தயாரா?

கடந்த சில வாரங்கள் வரையிலும் தேர்தல் களத்தில் அனுரவும் சஜித்தும் தான் முன்னணியில் நின்றார்கள். மெய்யான போட்டி அனுரவிற்கும் சஜித்துக்கும் இடையில் என்று தான் அபிப்பிராய வாக்கெடுப்புகள் தெரிவித்தன. இலங்கை போன்ற நாடுகளில் அபிப்பிராய வாக்கெடுப்புகள் திருத்தமாக அமைவது குறைவு. ஆனால் இந்தியாவில் சில பல்கலைக்கழகங்கள் அல்லது ஆய்வு நிறுவனங்கள் நடாத்தும் அபிப்பிராய வாக்கெடுப்புகள் மிகத் துலக்கமானவைகளாக அமைவதுண்டு. இப்பொழுது கிடைக்கும் செய்திகளின்படி சஜித்தும் அனுரவும் தான் முன்னணியில் நிற்கின்றார்கள். ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் தேர்தல் வெற்றிகளை கடைசி வாரங்கள், அல்லது கடைசி நாட்கள் தீர்மானிக்க முடியும். தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன் நிகழக்கூடிய திருப்பகரமான சம்பவங்கள் வெற்றியின் போக்கைத் தீர்மானித்து விடும்.

எனவே நாடு அடுத்த ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கும் நாட்களுக்குள் நுழைந்து விட்டது. இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் குறிப்பாக ஜனாதிபதி முறைமை அமுல்படுத்தப்பட்ட பின்னரான கடந்த பல தசாப்தங்களில், பதவியில் இருக்கும் ஒரு ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாகக் கட்டுப்பணம் செலுத்தியது என்பது இது தான் முதல் தடவை.

ஒரு சுயேட்சையாக கட்டுப் பணம் செலுத்தியவர் பல்வேறு கட்சிகளின் பொது வேட்பாளராக தன்னை முன்னிறுத்துவதில் வெற்றி பெறுவாராக இருந்தால், நாமலும் கட்டுப் பணம் செலுத்துவராக இருந்தால் தேர்தலில் நான்கு முனைப் போட்டிகளுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றனவா?

# ஒற்றையாட்சியைப் பாதுகாக்க எம்மால் மாத்திரமே முடியும்!



நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் தேசிய உற்பத்தி ஆகியவற்றை எம்மால் மாத்திரமே பாதுகாக்க முடியும். தேர்தலில் நிச்சயம் வெற்றிப் பெறுவோம். கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுவதால் எவரும் எமக்கு சவாலல்ல என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று 15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை வேட்பு மனுவை சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் தேசிய உற்பத்திகளை எம்மால் மாத்திரமே பாதுகாக்க முடியும். இந்த தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றிப் பெறுவோம். அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். நபர்களை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் செயற்படவில்லை. கொள்கைகளை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம். நாங்கள் செயற்படுகிறோம். அரசியலில் நண்பரும் இல்லை எதிரியும் இல்லை என்பார்கள். ஆகவே எம்மை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணைவார்கள் என்றார். இதன்போது பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்பாக ஒன்றுக் கூடி நாமல் ராஜபக்ஷவை வரவேற்றார்கள். பட்டாசு கொளுத்தி தமது ஆதரவை வெளிப்படுத்தினார்கள். ஆதரவாளர்கள் மத்தியில் வந்த நாமல் ராஜபக்ஷ தேர்தலில் நிச்சயம் வெற்றிப் பெறும். சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**சுன்னாகத்தில் காணி விற்பனைக்கு!**

**சுன்னாகத்தில் மின்சார நிலைய வீதியில் அரசாங்கத்தின் பரிசோதனை நடைபெற்று எந்தவொரு நிலத்தடி நீரும் அசுத்தமாகவில்லை என்ற சான்றிதழ் பெற்ற 8 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்த காணி. விலை பேசித் தீர்க்கலாம்.**

**தொடர்புகளுக்கு:- 416 841 9600**

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 ஆகஸ்ட் 2024 - 16 ஆகஸ்ட் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலம் சுப்பிரமணியம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் முகுந்தன் குலசிங்கம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் பெற்றோர்கள், உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 33வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குமாரசாமி துரைராசா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராசா அவர்களது 33வது ஆண்டு நினைவு நாள் 13 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி. இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குமாரசாமி துரைராசா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 19வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 19வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன்

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் (மாவீரன் கப்டன் ஜேம்ஸ்) அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 07 ஆகஸ்ட் 2024 புதன் கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரின் பெற்றோர்களும் உறவுகளும் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் அவர்களை நினைவு கூர்ந்தும் அவரது கனவு நனவாகவும் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது பிறந்த நாள் நினைவாக



### செல்வன் தனோஷன் ஜெயகுமார்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் தனோஷன் ஜெயகுமார் அவர்களது 26வது பிறந்த நாள் 10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள் சகோதரி மற்றும் அவரது நண்பர்கள் உறவுகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லம் ஆகிய இரண்டு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் தனோஷன் ஜெயகுமாரின் பிறந்த நாளில் அவரை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினர், நண்பர்களுடன் அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் தனோஷன் ஜெயகுமார் அவர்களின் 26வது பிறந்த நாள் நினைவாகும். அன்றைய நாளில் அவரை நினைவு கூர்ந்து அவரது பெற்றோர்கள், சகோதரி, உறவுகள், நண்பர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் தனோஷன் ஜெயகுமார் அவர்களின் 26வது பிறந்த நாள் நினைவாகும். அன்றைய நாளில் அவரை நினைவு கூர்ந்து அவரது பெற்றோர்கள், சகோதரி, உறவுகள், நண்பர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை சமூகசேவையாளரும் தமிழ் மொழிப் பற்றாளருமாகிய திரு சிவன் இளங்கோ அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சிவன் இளங்கோ அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கீர்த்தன் மயூரிக்கா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஈசான் கீர்த்தனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஈசான் கீர்த்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




12 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் சுவர்ணா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




13 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராஜா அவர்களது 33வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சகிலா பிரபாகரன் அவர்கள் சீரடி பாபா உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்




15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழும் சமூக சேவையாளரும் இனப்பற்றாளருமாகிய தொழில் அதிபர் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழும் சமூக சேவையாளரும் இனப்பற்றாளருமாகிய தொழில் அதிபர் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்

முற்றிலும்
புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்

# வானவில் 2024

## இயல்–இசை–நாடகம்

கோடை காலத்தின் குளிர் தென்றல்

SEPTEMBER 28 SATURDAY 6:00 PM

இரண்டு நாட்கள்

SEPTEMBER 29 SUNDAY 6:00 PM

**Armenian Youth Centre**
50 Hallcrown Pl. North York, M2J 1P6

## பேச்சுப் போட்டி

Saturday, August 24, 2024 at 9:00AM

**Talenta Academy**
2020 Ellesmere Road, Unit #2, Toronto, ON M1H 2Z8

முதலிடம் பெறுபவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464

உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## அருள்மிகு திருமுருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்



**ஆரம்பம்**
23-08-2024

**பூர்த்தி**
02-09-2024

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

நிகழும் குரோதி வருடம் ஆவணி மாதம் 7ம் நாள் (23-08-2024) ரேவதி நட்சத்திரமும், பௌர்ணமி திதியும், பஞ்சமி திதியும் கூடியுள்ள நன்நாள் வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி ஆவணி மாதம் 16ம் நாள் (01-09-2024) ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தசி திதியில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று 10 தினங்கள் திருமுருகன் திருவிழா கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து கந்தப்பெருமான் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

| சப்பறத்திருவிழா | தேர்த்திருவிழா | 1008 சங்காபிஷேகம் |
|---|---|---|
| 30-08-2024 வெள்ளிக்கிழமை | 31-08-2024 சனிக்கிழமை | 01-09-2024 ஞாயிற்றுக்கிழமை |

### திருவிழா விபரம்

| காலம் | | திருவிழா | அலங்காரம்/வாகனம் | உபயம் |
|---|---|---|---|---|
| 22-08-2024 | வியாழன் | கணபதிஹோமம் | - | திரு. பா. விக்னராஜா குடும்பம் |
| 23-08-2024 | வெள்ளி | 1ம் திருவிழா | ஓம்பிரணவஉபதேசம் | திரு. சி.அ. ஐயாத்துரை குடும்பம் - திருநெல்வேலி |
| 24-08-2024 | சனி | 2ம் திருவிழா | திருநடனம் | திரு. சிவகுமார், வனஜா கந்தசாமி குடும்பம் |
| 25-08-2024 | ஞாயிறு | 3ம் திருவிழா | கார்த்திகை | திரு. உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 26-08-2024 | திங்கள் | 4ம் திருவிழா | தண்டபாணி | திரு. ம. கிருபாகரன் குடும்பம் |
| 27-08-2024 | செவ்வாய் | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | திரு. சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 28-08-2024 | புதன் | 6ம் திருவிழா | மஞ்சம் | திரு. சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 29-08-2024 | வியாழன் | 7ம் திருவிழா | வேட்டை | திரு. பாஸ்கரன் கணேசானந்தன் குடும்பம் |
| 30-08-2024 | வெள்ளி | 8ம் திருவிழா | சப்பறம் | திருவாளர்கள் கார்த்திகேசு, தம்பையா, செல்வராசா, தெய்வேந்திரராசா, செல்வரட்ணம், பிரேமனந்தன் குடும்பத்தினர் |
| 31-08-2024 | சனி | 9ம் திருவிழா | தேர் | திரு. விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| ,, | சனி | இரவுத்திருவிழா | தேரடி | திரு. சிவலிங்கம் குடும்பம் |
| 01-09-2024 | ஞாயிறு | 10ம் திருவிழா | 1008 சங்காபிஷேகம் | திரு. அசோக்குமார் வேலாயுதம் குடும்பம் |
| ,, | ஞாயிறு | இரவு | சுவாமி வீதியுலா | - |
| 02-09-2024 | திங்கள் | காலை | பிராயச்சித்தம் | திரு. வல்லிபுரம் கணேசன் குடும்பம் |
| ,, | திங்கள் | இரவு | திருக்கல்யாணம் | திரு. செந்தில்குமரன் ஆனந்தன் குடும்பம் |
| 03-09-2024 | செவ்வாய் | இரவு | வைரவர்மடை | திரு. சிவா சின்னத்தம்பி குடும்பம் |

காவடி, கற்பூரச்சட்டி மற்றும் பால்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் தயவு செய்து ஆலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.
தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**Jeyadurgha Dhevastanam - Mississauga**
1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.com

# பிரம்டனில் நிர்மாணிக்கப்படும் "தமிழினப் படுகொலை" நினைவுத் தூபி நல்லிணக்க செயன்முறையைப் பாதிக்குமாம்! பிரம்டன் மேயருக்கு ஸ்ரீலங்கா அரசு கடிதம்!

புலம்பெயர் தமிழர்களால் கனடாவின் பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி இலங்கையிலும், கனேடிய வாழ் இலங்கையர்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் எனவும், ஆகவே இம்முயற்சிக்கு உதவ வேண்டாம் எனவும் பிரம்டன் நகர கவுன்சில் மேயர் பற்றிக் பிரவுனிடம் இலங்கை கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து பிரம்டன் நகர கவுன்சில் மேயர் பற்றிக் பிரவுனுக்கு கனடாவின் டொரன்டோ நகரிலுள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகத்தின் கொன்சியூலர் நாயகம் துஷார ரொட்ரிகோ கடந்த மேமாதம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உங்களது பிரம்டன் நகர கவுன்சில் அலுவலகத்தில் உங்களை முதன் முறையாகச் சந்தித்ததையும், இலங்கையில் சுமார் 30 வருட காலமாக நீடித்த யுத்தம் தொடர்பில் நாம் கலந்துரையாடியதையும் இப்போது நினைவுகூருகிறேன்.

அதன்படி கனேடியவாழ் இலங்கையர் குழுவொன்று உங்களது நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபி எனக்கூறப்படும் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்திருப்பதாகவும், அதற்கு பிரம்டன் நகர கவுன்சில் அனுமதி அளித்திருப்பதாகவும் பல்வேறு கனேடிய இலங்கையர் அமைப்புக்கள் எமது அவதானத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

அதிலும் குறிப்பாக எவ்வித இன, மத பேதங்களுமின்றி அனைத்து இலங்கையர்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவ்வாறிருக்கையில் இத்தகைய நினைவுத்தூபியை நிர்மாணிப்பது பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் அவ்வமைப்புக்கள் கரிசனை வெளியிட்டிருக்கின்றன. அதுமாத்திரமன்றி இந்நடவடிக்கையானது கனேடிய இலங்கையர் சமூகத்தினிடையேயான இன நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டிலும், இலங்கையின் பல்லின சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையிலும் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தும்.


அதேவேளை இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக இடம் பெற்ற யுத்தத்தின் போது இனப்படுகொலை இடம் பெற்றமைக்கான ஆதாரங்கள் எவையும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட எந்தவொரு அமைப்புக்களினாலும் வெளியிடப்படவில்லை. யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருட்களும், அரச கட்டமைப்புக்கள் இடையூறின்றி இயங்குவதற்கு அவசியமான நிதியும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமை தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று இலங்கையில் இலவசக்கல்வி, இலவச சுகாதாரம், ஏனைய அரச மற்றும் தனியார் சேவைகள் உள்ளிட்ட அனைத்தும் தமிழர்கள் உள்ளடங்கலாக சகலராலும் சமத்துவமான முறையில் அனுபவிக்கப்படுகின்றன.

சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் கொவிட் – 19 வைரஸ் பெருந்தொற்று, இயற்கை அனர்த்தங்கள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு இலங்கை முகங்கொடுத்த போதிலும், யுத்தத்துக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களைந்து, அதன் பின்னரான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கே அரசாங்கம் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வந்திருக்கின்றது. எனவே தமிழர்கள் உள்ளடங்கலாக இலங்கையின் பல்லின சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கும், கனேடிய வாழ் இலங்கையர்களுக்கும் நன்மையளிக்கக் கூடியவகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு தமிழினப்படுகொலை நினைவுத்தூபி நிர்மாணம் போன்ற பிரிவினைகளை ஏற்படுத்தவல்ல நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பதிலாக, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு உதவுமாறும் உங்களிடம் வலியுறுத்துகின்றேன் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பதற்கு முன்னர், அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் செல்வது குறித்து சகல வேட்பாளர்களுடனும் பேரம் பேசுவது சிறந்த அணுகுமுறை எனவும், இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் இந்த பேரம் பேசலை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதன் பின்னர் சிறந்த தீர்வுத்திட்ட முன்மொழிவை முன் வைப்பவரை ஆதரிப்பது குறித்துத் தீர்மானிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் சார்பில் களமிறக்கப்பட்டிருக்கும் பொதுவேட்பாளர் யார் என சுமந்திரனிடம் கேட்டறிந்த உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பேரம்பேசுமாறு தான் ஏனைய கட்சிகளுக்கும் தான் ஆலோசனை வழங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.



# பொது வேட்பாளர் வந்து விட்டார்!

தமிழ்ப் பொது வேட்பாளர் யார் என்ற கேள்விக்கு இப்பொழுது விடை கிடைத்து விட்டது. ஆனால் கடந்த சில வாரங்களாக அந்த கேள்வியை முன் வைத்து பல்வேறு விதமாக விமர்சிக்கப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச்சபையும் கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பினால் ஒரு பொது வேட்பாளரை கண்டு பிடிக்க முடியவில்லை என்பது ஒரு மிகப்பெரிய பலவீனமாக உருப்பெருக்கிக் காட்டப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அடக்கப்படும் அமைப்புக்கான முதலாவது கருநிலைச் சந்திப்பு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெற்றது. அதன் பின் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஜீன் மாதம் 29 ஆம் திகதி இறுதியாக்கப்பட்டது.

அதன்பின் ஜீலை மாதம் 22 ஆம் திகதி அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக கையெழுத்திடப்பட்டது.அதன் அடிப்படையில் ஒரு பொதுக் கட்டமைப்பு இயங்கத் தொடங்கியது. அத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது ஒரு பொது வேட்பாளரை கண்டு பிடிப்பதற்காக அன்றிலிருந்து இயங்கத் தொடங்கியது.

கடந்த எட்டாம் திகதி ஒரு பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டிருக்கிறார். அப்படிப் பார்த்தால் மொத்தம் 18 நாட்கள்தான் ஒரு பொது வேட்பாளருக்கான தேடல் மும்முரமாக இடம் பெற்றது. ஒரு சமூகத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயகரமான விதங்களில் தடம் மாற்றக்கூடிய ஒரு குறியீட்டு வேட்பாளரை கண்டு பிடிப்பதற்கு 18 நாட்கள் சென்றன என்பது ஒப்பீட்டளவில் குறைவு தான். அதற்காக 18 மாதங்களை எடுத்துக் கொண்டால் கூட குற்றமில்லை.

ஒரு பொது வேட்பாளர் ஒரு பொதுக் குறியீடு என்று தொடக்கத்திலிருந்தே கூறப்பட்டு வந்தது. அவ்வாறு ஒரு பொதுக் குறியீட்டை ஏன் தேட வேண்டி வந்தது? ஏனென்றால் தமிழ் மக்கள் மத்தியில் கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. ஆனால் தமிழ் அரசியல் சக்தியை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கவல்ல ஜனவசிய மிக்க தலைவர்கள் அநேகமாக இல்லை. தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒரு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியமிக்க தலைமைகள் இருந்திருந்தால் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளருக்கு தேவையே இருந்திருக்காது. எனவே ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை தேடுவதில் உள்ள சவால் என்னவென்றால். தமிழ் மக்களை ஒரு பொதுக் குடையின் கீழ் ஒன்றிணைக்கவல்ல தலைமைகளுக்கு தட்டுப்பாடு உள்ளது என்பது தான்.

இப்பொழுது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் அவ்வாறு எல்லாத் தகமைகளும் உடையவர் என்று இக்கட்டுரை கூறவரவில்லை. அரசியலில் மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையில் எதிலுமே 100வீதம் பூரணமானது என்று எதுவும் கிடையாது. இருப்பவற்றில் சிறந்தவற்றை வைத்துத் தான் அரசியலைக் கொண்டு போகலாம். ஏனென்றால் அரசியல் எனப்படுவது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகள் என்று பார்த்தால் இருக்கின்றவைகள் தான் சாத்தியக்கூறுகள். இல்லாதவைகள் அல்ல.

இந்த அடிப்படையில் தான் ஒரு பொது வேட்பாளரை பொதுக் கட்டமைப்பு முன் வைத்திருக்கின்றது. தமிழ்ப் பொது நிலைப்பாடு என்பது தமிழ்த் தேசிய நிலைப்பாடு தான். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டின் பிரதான மூலக்கூறு தாயக ஒருமைப்பாடு. அந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உணர்வுபூர்வமாகவும் நடைமுறைச் சாத்தியமான



விதத்திலும் ஒன்றிணைக்கும் தேவைகளை அடிப்படையாக வைத்து கிழக்கிலிருந்து ஒரு பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அவர் ஒரு குறியீடு தான். தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் காணப்படும் கருத்துருவாக்கிகள் ஒரு பொது வேட்பாளர் தொடர்பாக கட்டியெழுப்பிய கருத்துருவாக்கம் என்னவென்றால், கிழக்கிலிருந்து ஒரு பெண் வேட்பாளர்தான். அவரும் அரசியல் கட்சிகள் சாராதவராக இருந்தால் உத்தமம் என்று கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் அப்படி ஒரு பெண் வேட்பாளரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் நெருக்கடிகள் இருந்தன. மட்டுமல்ல, நாட்களும் குறைவாக இருந்தன. ஒரு பெண் வேட்பாளரைக் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஓர் ஆண் வேட்பாளரை அதாவது கட்சி சாரா ஆண் வேட்பாளரை கண்டு பிடிக்கலாமா என்று சிந்திக்கப்பட்டது. ஆனால் அங்கேயும் வரையறைகள் இருந்தன. அதன் பின்னர் தான் கட்சி சார்ந்த யாராவது இருப்பார்களா என்று தேட வேண்டி வந்தது.

ஜனாதிபதித் தேர்தல் பொறுத்து பொதுக் கட்டமைப்புக்கு சட்டரீதியாக சில வரையறைகள் இருந்தன. தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தலாம். அல்லது ஒரு முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுயேட்சையாகக் களமிறங்கலாம். இந்த இரண்டு சாத்தியக்கூறுகளுக்குள்ளும் தான் ஒரு பொது வேட்பாளரைத் தேட வேண்டியிருந்தது. அதாவது தேர்தல் சட்டங்களின்படி ஒன்றில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி வேண்டும். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டும்.

தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகள் அவ்வாறு சின்னத்தை தருவதற்குத் தயாராகக் காணப்பட்டன. சில கட்சிகள் தரத் தயங்கின. பொதுகட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சியின் சின்னத்தை ஒரு பொது நிலைப்பாட்டுக்காகப் பயன்படுத்தி அதன் மூலம் திரட்டப்பட்ட வாக்குகளையும் பிரபல்யத்தையும் அடுத்து வரும் தேர்தலில் அக்கட்சி தனது தனிப்பட்ட கட்சி தேவைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக ஓர் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும் என்று அங்கே சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேர்தல் ஆண்டுகளாகக் காணப்படும் ஓர் அரசியல் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து வரக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தமது கட்சி சின்னத்தைப் பயன்படுத்தாமல் விடுவது தொடர்பில் கட்சிகள் அதிகமாக யோசித்தன. இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஒரு சுயேச்சை வேட்பாளரைப் பொதுக் கட்டமைப்பு முன் நிறுத்தியமை என்பது கட்சிச் சின்னம் கிடைக்காத காரணத்தால் அல்ல. அதைவிட முக்கியமாக வடக்குக் கிழக்கு ஒருங்கிணைந்த தாயகத்தை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கு நிலையில் இருந்து தான் என்று .தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கூறுகிறார்கள். மேலும் தமிழரசுக் கட்சிக்குள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரை பொது கட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்துவது என்பது பரந்தகன்ற தளத்தில் கட்சிகளைக் கடந்த தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான அடித்தளமாகவும் அமையும்.

கடந்த 15 ஆண்டுகளாக கருத்துருவாக்கமாக காணப்பட்ட ஒரு விடயம், இப்பொழுது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வந்து விட்டது. தமிழ்ப் பொது வேட்பாளர் பரந்தகன்ற தளத்தில் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவாராக இருந்தால், அதுவே கடந்த 15 ஆண்டுகளில் கிடைத்த மகத்தான வெற்றியாக அமையும்.

தமிழ்மக்கள் எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? சில நினைவு கூர்தல்களைத் தவிர மற்றெல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாகப் பலவாக நிற்கிறார்கள். வடக்காக கிழக்காக், சாதியாக, சமயமாக், கட்சிகளாக கொள்கைகளாக தியாகிகளாக, துரோகிகளாக கட்சிகளுக்குள் அணிகளாக் முகநூலில் குழுக்களாக் திருச்சபைக்குள் அணிகளாக் ஆலய அறங்காவலர் சபைகளுக்குள் அணிகளாக பழைய மாணவர் சங்கங்களுக்குள் அணிகளாக் புலம்பெயர்ந்த நாடுகளில் அமைப்புகளாக அமைப்புக்களுக்குள் அணிகளாக... .எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாகப் பலவாக நிற்கிறார்கள்.எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? ஒன்றாக நிற்கக்கூடாது என்பதில் தானே ஒன்றாக நிற்கிறார்கள்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



தன் பலம் எதுவென்று தெரியாமல் தன்னைத் தானே நம்பாமல் சிதறிக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை அகக் கூடிய மட்டும் பெருந்திரளாகக் கூட்டிக்கட்டுவது தான் தேசியவாத அரசியல். ஏனெனில் தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரளாகும். தங்களை தேசமாக உணரும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உணர்வே தேசியம் எனப்படுகின்றது.அக்கூட்டு உணர்வுக்கு தலைமை தாங்குவதுதான் தேசியவாத அரசியல். தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவின் முதன்மை நோக்கமும் அதுதான்.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்பதை வெளி உலகத்துக்கு ஒரே குரலில் கூறுவார்களாக இருந்தால், தமிழ் மக்களின் பேர பலம் அதிகரிக்கும். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 15 ஆண்டுகளாக இன அழிப்புக்கு எதிராக நீதி கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை.

2009 மே மாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது ஆயுதப் போராட்டம் தான். அது ஒரு விளைவுத ான். மூல காரணமாகிய ஒடுக்குமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது இன ஒடுக்கு முறை நிறுத்தப்படவில்லை. இன ஒடுக்குமுறை எனப்படுவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகத் திரண்டிருப்பதை அழிப்பது தான். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் காரணிகளை அழிப்பது தான். அதனால் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெரும் திரளாக்தேசிய இனமாக தமிழ் மக்களைத் திரட்டி எடுப்பது தான் தேசியவாத அரசியல்.தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு அந்தக் கொள்கை வழிபட்டதே. எனவே தமிழ் மக்கள் முன் இரண்டே இரண்டு தெரிவுகள் தான் உண்டு ஒன்று ஒரு தேசமாகத் திரள்வது. அல்லது தன் பலம் எதுவென்று தெரியாத் தன்னைத் தானே நம்பாத் ஒரு மக்கள் கூட்டமாகச் சிதறித் தூர்ந்து போவது.

**Chemistry & Math Tutoring**

An Ontario-certified teacher with several years of experience teaching / tutoring Chemistry (Grades 11 & 12) and Math(Grades 9-12) would be available to help high school students in the same subjects for the academic year 2024/2025.

Contact 416 438-9157 (Home)
647 302-1763 (Cell)
email: mvignes11@gmail.com

# இரு முனைச் சவால்கள்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா ஒரே நேரத்தில் இரண்டு சவால்களை எதிர் கொண்டிருக்கிறது. முதலாவது, இலங்கையில் நடக்கப் போகின்ற ஜனாதிபதி தேர்தல். இரண்டாவது பங்களாதேஷில் உருவாகி இருக்கின்ற அரசியல் குழப்பம்.

இந்த இரண்டு சவால்களையும் இந்தியாவினால் உதாசீனப்படுத்த முடியாது. தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு கிழக்காகவும், தெற்காகவும் உள்ள இந்த இரண்டு நாடுகளும், அதன் பாதுகாப்பில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை.

இந்தியாவின் வடக்கு எல்லையில் சீனாவும், மேற்கு எல்லையில் பாகிஸ்தானும் எதிரிகளாகவே இருக்கின்றன. அங்கு இந்தியா எந்த நேரத்திலும் விழிப்புடன் இருக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. இந்தியாவின் பெரும்பாலான படைகள், இந்த எல்லைகளைப் பாதுகாப்பதிலேயே ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால், பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் எல்லைகளை விடவும், பங்களாதேஷுடனான இந்திய எல்லை நீளமானது. 4.096 கிலோ மீற்றர் நீளமான எல்லையை பங்களாதேஷுடன் கொண்டிருக்கிறது. இந்தியா. அதன் மேற்கு வங்கம், திரிபுரா, மேகாலயா, அசாம், மிசோராம் ஆகிய ஐந்து மாநிலங்கள், பங்களாதேஷுடன் நிலத் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் இந்த மாநிலங்களுக்கு நடுவே கிடுக்கிக்குள் அகப்பட்ட பொருள் போல பங்களாதேஷ் அமைந்திருக்கிறது. இந்தியாவுடனான எல்லையில் சுமார் 2000 கிலோ மீற்றர் பகுதியில் எல்லை வேலி கூட கிடையாது. இப்படிப்பட்ட நிலையில், பங்களாதேஷின் நிலவரங்களைப் பற்றி இந்தியாவினால், கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

பங்களாதேஷில் 1971இல் போர் வெடித்த போதும் சரி, கலவரங்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்ற போதும் சரி, இந்திய எல்லைக்குள், இலட்சக்கணக்கில் பங்களாதேஷ் அகதிகள் உள்நுழைவது வழக்கம். அதனைக் கட்டுப்படுத்துவோ, தடுக்கவோ முடியாத நிலையில் தான் இந்திய அரசாங்கம் இருக்கிறது. வட,கிழக்கு மாநிலங்களில் பங்களாதேஷ் நாட்டவர்கள் குடியேறுவது தொடர்பான பிரச்சினைகள் தீவிரமாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் அங்கு ஏற்பட்டிருக்கின்ற அரசியல் குழப்பம் இந்தியாவுக்கு தலை வலியாக மாறியிருக்கிறது. ஆட்சியில் இருந்த ஷேக் ஹசீனா இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். ஹசீனாவின் தந்தை முஜிபுர் ரஹ்மான் பங்களாதேஷை பாகிஸ்தானிடம் இருந்து பிரிக்கும் சுதந்திரப் போரை அறிவித்த போது, அதற்கு இந்தியா உதவியது.

அந்தத் தொடர்பு இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. 2009இல் ஹசீனா ஆட்சிக்கு வர முன்னர் பங்களாதேஷுடன் சீனா நெருக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அந்த நெருக்கத்தை குறிப்பிட்டளவில் கட்டுப்படுத்த உதவியவர் ஹசீனா தான்.

அந்த தொடர்புகளால் தான், அவர் டாக்காவில் இருக்க முடியாத நிலை ஏற்பட்ட போது, பங்களாதேஷ் விமானப் படையின் ஹெலிகொப்டரில் புதுடில்லிக்கு அருகில் உள்ள காசியாபாத் ஹின்டன் விமானப்படைத் தளத்தில் சென்று இறங்கினார். அவர் குறுகிய நேரத்துக்குள் தான் இந்தியாவில் தஞ்சமடைவதற்கு அனுமதி கோரினார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.



ஷேக் ஹசீனா இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ள நிலையில், அடுத்து அமையப் போகும் அரசாங்கம் எப்படிப்பட்டது, அது எந்தளவுக்கு உறுதியானதாக இருக்கும், அதன் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் அயலாரான இந்தியாவுடனான உறவுகள் எப்படிப்பட்டதாக இருக்கும், குறிப்பாக சீனாவை எப்படிக் கையாளப் போகிறது போன்ற பல்வேறு கவலைகள் இப்போது புதுடில்லிக்குத் தோன்றியிருக்கிறது.

பங்களாதேஷ் 1971இல் சுதந்திரம் பெற்ற பின்னர் பல இராணுவ ஆட்சியாளர்களையும் சந்தித்த நாடு. 1975இல் முஜிபுர் ரஹ்மான் அவரது குடும்பத்தினருடன் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட பின்னர், ஜெனரல் ஷியாவுர் ரஹ்மான் ஆட்சிக்கு வந்தார். அவர் 1981இல் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஜெனரல் ஹுசேன் முகமட் எர்ஷாட் அதிகாரத்தைக் கைப்பற்றினார். பங்களாதேஷ் சுதந்திரத்துக்குப் பின்னர், 1976 தொடக்கம் 1991 வரையான காலம் முற்றாக, இராணுவ ஆட்சிக்குள் அல்லது அதனை சார்ந்த செல்வாக்கிலேயே இருந்தது. அதற்குப் பின்னரே அங்கு ஜனநாயக அரசு தோற்றம் பெற்றது.

அரசியல் படுகொலைக்கு உள்ளான, முஜிபுர் ரஹ்மானின் மகள் ஹசீனாவும், ஜெனரல் ஷியாவுர் ரஹ்மானின் மனைவி பேகம் காலிதா ஷியாவும், மாறி மாறி ஆட்சிக்கு வந்தனர். இப்போது இராணுவம் ஆட்சியை வைத்துக் கொள்ளப் போகிறதா இடைக்கால அரசு மூலம் மீண்டும் ஜனநாயக ஆட்சி உறுதிப்படுத்தப்படுமா என்ற கேள்வி இருக்கிறது.

அங்கு மீண்டும் உறுதியான அரசு ஒன்று உருவாகும் வரை, புதுடில்லிக்கு நெருக்கமான அரசு ஒன்று அமையும் வரை, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத அரசு ஒன்று தோற்றம் பெறும் வரை இந்தியாவுக்கு நிம்மதி இருக்காது.

அதேபோன்று தான் இலங்கை விவகாரத்திலும் இந்தியாவின் நிலை காணப்படுகிறது. இலங்கையில் நடக்கப் போகும் ஜனாதிபதி தேர்தலில் யார் ஆட்சிக்கு வரப் போகிறார் என்பது இந்தியாவுக்கு மிக மிக முக்கியமானது. இலங்கையுடன் சுமார் 400 கிலோமீற்றர் கடல் எல்லையை கொண்டிருக்கிறது இந்தியா. இந்த கடல் எல்லை இந்தியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை கொடுக்கா விட்டாலும் இலங்கையுடன் அவ்வப்போது முரண்பாடுகள் இருந்து கொண்டே இருக்கிறது.

இலங்கையுடனான கடல் எல்லை பாதுகாப்பானதாக இருக்க வேண்டுமானால் புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவுகள் சமூகமானதாக பேணப்பட வேண்டும். இலங்கைக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவுகளில் சீனா சிக்கலான ஒரு பாராக இருந்து வருகிறது. சீனாவின் தலையீடுகள் மற்றும் முதலீடுகள் போன்றவற்றினாலும், பாதுகாப்பு சார்ந்த நிகழ்வுகளாலும் இந்தியா அடிக்கடி கவலை கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

வரப்போகும் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், உருவாக உள்ள அரசாங்கம் இந்தியாவுக்கு நெருக்கமான உறவை பேணுமா சீனாவுடனான நெருக்கத்தை விரும்பும் என்ற கேள்வி நீடிக்கிறது.

சீனாவை சாராத சீனாவின் நலன்களை முக்கியத்துவப்படுத்தாத ஒரு அரசாங்கம் அமைய வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையுடன் இருக்கிறது. அதனால் தான் அநுர குமாரதிசாநாயக்கவை, புதுடில்லிக்கு அழைத்து, தமது பாதுகாப்பு கரிசனைகள் குறித்து தெளிவுபடுத்தியது. இது மாத்திரம் போதாது. இப்போது போட்டிக் களத்தில் நாமல் ராஜபக்ஷவும் வேறு புகுந்திருக்கிறார். அவர் போட்டிக்களத்தில் நுழைவதற்கு சில நாட்கள் முன்னதாக, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்திருந்தார். கடந்த முதலாம் திகதி நடந்த சந்திப்புக்குப் பின்னர் தான், அவர் 7ஆம் திகதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். ராஜபக்ஷவினர் மத்தியில் இந்தியாவுக்கு சந்தேகங்கள் உள்ளது.

ராஜபக்ஷவினரின் ஆட்சிகளை கவிழ்ப்பதில் இந்தியா தொடர்புபட்டிருந்தது போன்ற குற்றச் சாட்டுகள் உள்ள நிலையில், இந்தியாவுக்கு அவர் உறுதிமொழியைக் கொடுக்க முற்பட்டாரா என்ற கேள்வியும் உள்ளது.

பங்களாதேஷ் நிலவரத்தைப் போலத் தான், இலங்கை விடயத்திலும் இந்தியா அதிகம் குழம்பும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் இந்த அரசியல் போட்டியில் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை அவ்வளவு இலகுவாக கணிக்க முடியாதிருக்கிறது.

இரண்டு நாடுகளிலும், காணப்படும் இந்த நிச்சயமற்ற நிலைகள் இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகளை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு அதிகப் படுத்தியிருக்கின்றன.



# விடுதலைப்புலிகளின் 2005ம் ஆண்டு அறிவிப்பு! இந்தத் தேர்தலிலும் தாக்கம் செலுத்துமா?

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். பொருளாதார ரீதியில் இலங்கை வீழ்ச்சி அடைந்திருந்த நிலையில், நாட்டை இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட ரணில் விக்ரமசிங்க, பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை ஓரளவு மீட்டு இயல்பு நிலைக்கு திருப்பியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில், வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம் என்ற கருப் பொருளை முன்னிலைப்படுத்திய ரணில் விக்ரமசிங்க தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்திருக்கின்றார்.

போரை முடிவுக்கு கொண்டு வந்தோம் என்பதை முன்னிலைப்படுத்தி 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வெற்றி பெற்றதை போன்று, பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை மீட்டோம் என்ற கருப்பொருளை முன்னிலைப்படுத்தி ரணில் விக்ரமசிங்க தற்போது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

### ரணில் தொடர்ந்து தோல்வி

இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க, இரண்டு முறையும் தோல்வியடைந்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்ரமசிங்க 1994ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து, 1999ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், முதல் தடவையாக போட்டியிட்டார்.

சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்கவை எதிர்த்து போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க அந்த தேர்தலில் தோல்வி அடைந்தார்.

சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க 4.312.157 வாக்குகளை பெற்றார்.



ரணில் விக்ரமசிங்க 3.602.748 வாக்குகளை பெற்றிருந்தார். 2005ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ஸவை எதிர்த்து போட்டியிட்டார். ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக களமிறங்கிய மஹிந்த ராஜபக்ஸ, ரணில் விக்ரமசிங்கவை தோற்கடித்தார்.

### ரணிலின் தோல்விக்கு புலிகள் காரணம்?

சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலப் பகுதியில் 2001ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 109 ஆசனங்களை பெற்று ஆட்சியை கைப்பற்றியது.

இதன் மூலம் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்றார். இலங்கையில் அப்போது பிரதமருக்கு அதிகாரம் காணப்பட்டது. அந்த காலப் பகுதியில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ரணில் கைப்பற்றியிருந்தார்.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் நார்வே தலையீட்டில் சமாதான பேச்சுவார்த்தை 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை, 2006ம் ஆண்டு முடிவுக்கு வந்த நிலையில், நான்காவது ஈழப் போர் ஆரம்பமானது. இந்த போர் நிறுத்தம் காணப்பட்ட காலப் பகுதியிலேயே 2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.



இந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ வெற்றியீட்டிய நிலையில், 2006ம் ஆண்டு மீள போர் ஆரம்பமானது 2005ம் ஆண்டு தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என வடக்கு, கிழக்கு மாகாண மக்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கோரிக்கை முன் வைத்தது. இதனால், அந்த மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதை பெருமளவு புறக்கணித்திருந்தனர். அந்த தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் வாக்களிக்காமையே, ரணில் விக்ரமசிங்கவின் தோல்விக்கு காரணம் என கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மூத்த பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளருமான பாரதி ராஜநாயகம் பிபிசி தமிழிடம் பேசுகையில் 2005ம் ஆண்டு தேர்தலை பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அப்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாகாண மக்கள் பெரும்பாலும் வாக்களிக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. எனினும், குறைந்தளவிலேயே பதிவாகியிருந்தன. வடக்கு மாகாண மக்கள் வாக்களித்திருந்தால், ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற்றிருக்கலாம் என்ற கருத்து பொதுவாகவே இருக்கின்றது என்றார்.

தேர்தலை புறக்கணிக்குமாறு 2005ம் ஆண்டு ஏன் விடுதலைப் புலிகள் அறிவிப்பை வெளியிட்டார்கள் என்ற கேள்விக்கு மூத்த பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளருமான பாரதி இராஜநாயகம் பதிலளித்தார்.

இலங்கையின் தேர்தலை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. சிங்கள மக்களே தங்களின் தலைவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்ற கருத்து விடுதலைப் புலிகளிடம் இருந்தது. அந்த அடிப்படையில் தான் அவர்கள் அந்த கோரிக்கையை விடுத்திருந்தார்கள்.' என அவர் கூறினார். சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட காலத்தில் ரணில் விக்ரமசிங்க சூழ்ச்சிகளை செய்தார் என்ற கருத்து மக்கள் மத்தியில் இருக்கின்றது. 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தையை பயன்படுத்தி கருணா போன்றோரை பிரித்து, விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த ரணில் விக்ரமசிங்க முயற்சித்தார் என கூறப்பட்டது என்கிறார் பாரதி இராஜநாயகம்.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் இன்றும் இருக்கின்ற நிலையில் 2005ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் வெளியிட்ட அறிவிப்பு 2024ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு தாக்கம் செலுத்துமா என்ற கேள்விக்கு, அவர் பதிலளித்தார்.

இந்த காலக் கட்டத்திலும் அவ்வாறான கருத்து சிலரால் முன் வைக்கப்பட்டு வருகின்றது. தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூட முன் வைக்கின்றது. எனினும், ஜனாதிபதி தெரிவில் தமது பங்களிப்பும் இருக்க வேண்டும் என தமிழர்கள் எண்ணுகின்றார்கள். இந்த நிலையில், தேர்தல் பகிஷ்கரிப்பு என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டாலும், அது எந்தளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை நிச்சயமாக சொல்ல முடியாது என தெரிவித்தார்.

2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிவிப்பு, அந்த தேர்தலில் தாக்கத்தை செலுத்தியது. 2005ம் ஆண்டுக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் முதல் முறையாக தற்போது தான் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுகின்றார்.

### இடைக்கால ஜனாதிபதியான ரணில்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 2009ம் ஆண்டு மௌனிக்கப்பட்டதை அடுத்து, மஹிந்த ராஜபக்ஸ போர் வெற்றியை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலை நடாத்தியிருந்தார்.

இந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸவை எதிர்த்து, பொது வேட்பாளராக சரத் பொன்சேகா களமிறக்கப்பட்டார். இலங்கை இராணுவ தளபதியாக இராணுவத்தை வழிநடத்தி போரை முடிவுக்கு கொண்டு வந்தார் என்ற பெருமையை சரத் பொன்சேகா பெரும்பான்மை மக்கள் மத்தியில் கொண்டிருந்தார்.

இந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஸவை எதிர்த்து, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பொது கூட்டணியொன்று ஆரம்பிக்கப்பட்டு, பொது வேட்பாளராக சரத் பொன்சேகா களமிறங்கிய நிலையில், அந்த தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடவில்லை.அதனைத் தொடர்ந்து, 2015ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

இந்த பின்னணியில், மஹிந்த ராஜபக்ஸவை கட்டாயம் தோற்கடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்த எதிர்க்கட்சிகள், மஹிந்த ராஜபக்ஸ அப்போது தலைமைத்துவம் வகித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை பிரித்தெடுத்து, மஹிந்த ராஜபக்ஸவை எதிர்த்து போட்டியிட விசூகம் வகுத்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பல தலைவர்கள் ஒன்றாக கை கோர்த்து, 2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக களமிறக்கியமை காரணமாக அந்த தேர்தலிலும் ரணில் விக்ரமசிங்க போட்டியிடவில்லை. அதனைத் தொடர்ந்து 2019ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் ரணில் விக்ரமசிங்க போட்டியிடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்பட்ட தலைமைத்துவ சர்ச்சை காரணமாக, அந்த கட்சியின் பிரதித் தலைவராக செயற்பட்ட சஜித் பிரேமதாஸ பெரும் எண்ணிக்கையிலான ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியை ஸ்தாபித்தார்.

இதன் மூலம் தனிமைப்படுத்தப்பட்ட ரணில் விக்ரமசிங்க 2019ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடவில்லை.

இந்த நிலையில், சஜித் பிரேமதாஸவை எதிர்த்து போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஸ, அந்த தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார். எனினும், கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, இலங்கையில் வரிசை யுகத்தை ஏற்படுத்தியது.

எரிபொருள், எரிவாயு, பொருட்களை கொள்வனவு செய்வதற்கு என வரிசைகளில் மக்கள் காத்திருக்கும் சூழல் ஏற்பட்ட நிலையில், கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் போராட்டத்தை எதிர் கொள்ள முடியாத கோட்டாபய ராஜபக்ஸ, பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்தார். அதனைத் தொடர்ந்து, போராட்டம் வலுப்பெற்றதை அடுத்து நாட்டை விட்டு கோட்டாபய ராஜபக்ஸ வெளியேறிய நிலையில், பதில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றதுடன், நாடாளுமன்றத்தில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பின் ஊடாக ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.

கோட்டாபய ராஜபக்ஸவின் பதவி காலத்தில் எஞ்சிய பகுதியை ரணில் விக்ரமசிங்க இடைக்கால ஜனாதிபதியாக நிறைவு செய்துள்ள நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை 19 வருடங்களுக்கு பின்னர் இம்முறை ரணில் விக்ரமசிங்க எதிர்கொள்கின்றார்.

நன்றி:- பிபிசி

# ஜனாதிபதித் தேர்தலும் தென்னிலங்கையின் அரசியல் அணுகுமுறையும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



தென் இலங்கை அரசியல் களம் என்றும் இல்லாதவாறு அதிக நெருக்கடியையும் குழப்பத்தையும் அடைந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பாரிய குழப்பத்தை இலங்கைத்தீவின் அரசியல் முழுவதும் தந்திருக்கின்றது.




2024 ஆண்டு ஜனாதிபதி தேர்தல் எதிர்பார்த்திருக்க முடியாத அளவுக்கு கட்சிகளையும் மக்களையும் நெருக்கடியான சூழலை நோக்கி அது தள்ளியுள்ளது. ஏறக்குறைய இதுவரை 22க்கு (08.08.2024) மேற்பட்ட வேட்பாளர்களை களத்தில் கொண்டதாக அமைந்துள்ளது. இது அதிக முரண்பாடுகளை தோற்றுவிப்பதோடு தென்னிலங்கை ஒரு அரசியல் கொதிநிலைக்கும் தள்ளப்படுகின்ற நிலையை அடையாளப்படுத்துவதாகவே அதன் அணுகுமுறைகள் காணப்படுகின்றது.

இக்கட்டுரையும் வர இருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் தென் இலங்கை வேட்பாளர்களின் வெற்றியை தீர்மானிப்பதில் உள்ள நெருக்கடியை தேடுவதாக அமைந்துள்ளது

2024 ஜனாதிபதி தேர்தல் பிரதானமாக மூன்று வேட்பாளர்களுக்கு இடையிலான போட்டியாக அமையவுள்ளது. ஆனால் தற்போது கட்டுப்பணம் செலுத்தியவர்கள் மட்டுமன்றி எதிர்காலத்திலும் இந்த எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

எதிர்காலத்தில் மேலும் பல வேட்பாளர்கள் நிறுத்தப்படுவதற்கான சூழல் உண்டு. தென்னிலங்கையின் வேட்பாளர் பட்டியலோடு புதிதாக வடக்கு கிழக்கில் தமிழ் பொது வேட்பாளர் என்ற அறிவிப்பு அதிகமுக்கியத்துவத்தை ஏற்ப இத்தக் கூடியது. அத்தகைல களத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹா மக்களின் ஆதரவை திரட்டுவதோடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுராகுமார திஸாநாயகா ஆகியோர் பிரதான போட்டியாளர்களாக உள்ளனர். இத்தகைய போட்டித் தன்மையில் தற்போ தைய ஜனாநிபதிக்கான வெற்றி வாய்ப்பு அதிகம் என்று விவாதிக்கப்படுகிறது. அத்தகைய எண்ணத்துக்கான அடிப்படையைத் தேடுவது அவசியமானது

முதலாவது தற்போதைய ஜனாதிபதி சுயேட்சை வேட்பாளராக தேர்தலில் நிறுத்தப்படுவது என்பது உத்திகளைக் கொண்டதாக விளங்குகிறது. பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்களுடைய ஆதரவோடு சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பும் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்பும் அதிகமாக உள்ளது. இது அனைத்துத் தரப்புகளதும் கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு தற்போதைய ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது. இது பெருமளவுக்கு அவரது சுயேட்சை என்ற அடையாளத்தின் ஊடாக பெறப்பட்ட ஒத்துழைப்பாகவும் கடந்த காலத்தில் ஆளுங்கட்சி என்ற அடிப்படையில் அதனுடைய பலத்திலும் இத்தகைய ஒத்துழைப்பை அவர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது ஏனைய இரு வேட்பாளர்களையும் புறந்தள்ளி விட்டு வெற்றியை அடைவதற்கான உத்தியாகவே உள்ளது. தென் இலங்கையின் அரசியல் சூழலானது அதற்கு அமைவாகவே ஆரம்ப காலப்பகுதியில் இருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்தனாவிடம் அரசியலைக் கற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்ஹா அவரை இலகுவில் எந்த தரப்பினாலும் தோற்கடிப்பது கடினம் என்பதை விளங்கிக் கொள்ள வெண்டும்.

இரண்டாவது தற்போதைய பொதுஜனப் பெரமுனவின் தேர்தல் உத்திகளில் ஒன்றாக மஹிந்த ராஜபக்ஷவின் வாரிசும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்க இத்தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய உரையாடலின் பின்புலத்தில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேரா நிறுத்தப்படுகின்ற சூழல் ஆரம்ப நாட்களில் இருந்து முன்மொழிக்கப்பட்டு வந்தது. தம்மிக பெரேரா பெருமளவுக்கு இலங்கையின் முதல் தர செல்வந்தராகவும் வர்த்தகராகவும் பிரமுகராகவும் அங்கீகாரம் மிக்க ஒரு நபராகவும் அடையாளப்படுத்தப்பட்டார். அத்தகைய அடையாளப்படுத்தலுக்குட்படுத்தப்பட்ட தம்மிக ஜனாதிபதி தேர்தலில் போலியான டம்மியாக ஒரு வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லாததன் காரணமாக இடைநடுவிலே புதிய வேட்பாளர் நாமல்ராஜபக்சா நிறுத்தப்பட்டுள்ளார்.

இது ரணில் விக்கிரம சிங்கவின் வெற்றியை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைய வாய்ப்புள்ளது. காரணம் பொதுவான பெரமுனவின் வாக்காளர்கள் தற்போது முன்னாள் ஜே.வி.பி இன் வேட்பாளரான அனுராவை நோக்கி வாக்களிக்க அதிகம் வாய்ப்புள்ளது. அத்தகைய வாக்குகளைத் தடுத்து நிறுத்தும் நிலையில் நாமல் ராஜபக்ஷ் நிறுத்தப்படுகிறார். அதே நேரம் எதிர்காலத்தில் ஒரு ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை முன்னிறுத்தவும் இத்தேர்தலை பொதுஜனப் பெரமுன பயன்படுத்துவதென திட்டமிட்டுள்ளது. ஒரு புறம் தற்போதைய ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்துதல் மறுபுறம் பொதுஜன பெரமுனவின் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளரை களத்தில் இறக்குவதுமாகும்.

மூன்றாவது தென்னிலங்கையின் வாக்களிப்பானது இடதுசாரிகளுக்கு எதிரானதாகவே அமைந்துள்ளது. இலங்கையின் மரபார்ந்த வாக்காளர்களின் பங்களிப்பு என்பது வேறுபட்டதாகவே அமைந்திருக்கின்றது.

குறிப்பாக கடந்த காலங்கள் முழுவதும் இடதுசாரி கொள்கைகளுக்கு எதிராகவும் சாமானியர்களுடைய அரசியல் இருப்புக்கு மாறுபட்டதாகவும் மத்திய தர வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்தில் உயர் வர்க்கத்தினுடைய நலன்களை பூர்த்தி செய்கின்ற விதத்திலும் தென்னிலங்கையினுடைய வாக்கு அளிப்பு மாதிரி காணப்படுகிறது.

இத்தகைய மரபார்ந்த வாக்காளர்களை கடந்து தற்போது புதிதாக இணைந்து கொள்ளப்பட்ட 10 இலட்சத்துக்கு மேற்படாத வாக்காளர்கள் அதிகமான தாக்கத்தை தேர்தல் ஏற்படுத்திவிடுவார்களா? என்பது பிரதான கேள்வியாகவே தெரிகின்றது. அத்தகைய சூழலில் மரபார்ந்த வாக்காளர்களும்ஏனைய சூழ்நிலையில் காணப்படும் வாக்காளர்களும் புதிய மாற்றத்திற்கு வித்திடுவார்களா என்பது குழப்பகரமானதாகவே உள்ளது. ஏனைய தேசியங்களின் வாக்களிப்பும் இடதுசாரிகளுக்கு எதிரானதாகவே கடந்த காலங்களில் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. அது நிச்சயமாக 2024 தேர்தலில் அனுரகுமார திசநாயக்காவின் வெற்றி வாய்ப்பு என்பது மிகக் கடினமான ஒன்றாகவே தோன்றுகிறது.

இலங்கை அரசியல் வரலாறு முழுவதும் இடதுசாரிகளுக்கு எதிராக கட்டமைப்பு வளர்ந்திருக்கின்றது. அது இலங்கைத் தீவு முழுவதும் அவதானிக்க கூடிய அம்சமாகும்.

நான்காவது இலங்கை தீவின் அரசியலில் அரகலய போராட்ட அணுகுமுறையானது இரண்டு அல்லது மூன்று இலட்சம் போராட்டக்காரரால் 45 இலட்சம் வாக்காளர்களது தெரிவை தகர்த்ததென்பது தேர்தலில் சாத்தியமாக்க முடியாது. அது மட்டுமன்றி அத்தகைய அணுகு முறையில் பங்கெடுத்துக் கொண்ட கட்சிகளும் அமைப்புகளும் இயக்கங்களும் உதிரிகளாக தற்போது தமக்கே ஒரு பாணியில் ஜனாதிபதி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

அத்தகைய நிலையில் வேட்பாளர்களுடைய வெற்றி வாய்ப்பு என்பது 50 சதவீதத்திற்கு அதிகமாக அமையும் என்பது மிகக் கடினமானதாகவே உள்ளது. அத்தகைய நிலையானது அரகலய போராட்டம் எவ்வாறு கட்சிகளாலும் இயக்கங்களாலும் இடதுசாரி அமைப்புகளாலும் உருவாக்கப்பட்டதோ அவ்வாறே அதே அடிப்படையில் வேட்பாளர்களுடைய எண்ணிக்கையும் ஜனாதிபதி தேர்தலில் காணப்படுகிறது. இந்த தரப்புகள் பங்கீடு செய்கின்ற புதிய வாக்குகள் ஒரு முழுமையான வெற்றியை ஒரு தரப்புக்கும் ஏற்படுத்த முடியாத நிலையை உருவாக்கும். அவ்வாறு உருவாக்குகின்ற சந்தர்ப்பம் என்பது அரகலயவின் இரண்டாம் கட்ட தோல்வியாக அளவீடு செய்ய வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாகும்.

ஐந்தாவது தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் போலிகளை முன்னிறுத்துகின்ற வேட்பாளர்களுடைய எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. அத்தகைய எண்ணிக்கை எந்த வேட்பாளரையும் 50சதவீத வாக்குகளை எடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுவதோடு சாதாரண பெரும்பான்மை பெறக்கூடிய சூழலை ஏற்படுத்தும். இது தற்போதைய ஜனாதிபதியின் வெற்றி வாய்ப்புக்கான சூழலமைப்பு ஆரோக்கியமானதாக உருவாக்கக் கூடியது.

ஆறாவது வடக்கு கிழக்கு வாக்காளர்கள் தமக்கான தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பதன் ஊடாக தென்னிலங்கையின் வேட்பாளர்கள் சார்ந்து எந்தவித வெளிப்படுத்துகையும் இல்லாதவர்களாக காட்ட முயல்வதும் 50 சதவீதத்திற்கு மேல் வாக்குகளை பெறுகின்ற சூழலை பாதிப்பதாக தெரிகின்றது ஆகவே நிச்சயமாக சாதாரண பெரும்பான்மை பெற ஒரு வேட்பாளர் இத்தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளுகின்ற விதத்தில் தேர்தலுக்கான அணுகுமுறைகளும் நகர்வுகளும் காணப்படுகிறது.

எனவே இலங்கையின் அரசியல் வரலாறு முழுவதும் சாமானியர்களுடைய பங்கினைவிட மேல் தட்டு வர்க்கத்தின் நலங்களுக்கு உட்பட்ட விதத்தில் தேர்தல்களை கட்டமைத்ததும் அதனை எதிர் நோக்குவதுமே அரசியலாக உள்ளது. தற்போதைய ஜனாதிபதியினுடைய ஆட்சி அதிகாரம் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்பை இத்தேர்தல் அதிகம் கொண்டிருக்கின்றது. இந்திய தரப்பும் இந்த தேர்தலில் தன்னுடைய பங்குக்கு அதிகமான கவனம் செலுத்துவதாக உள்ளது.

கனடாவில் வசிக்கும் 30 வயது
PHD வரை படித்த
மணமகளுக்கு
பொருத்தமான மணமகனை
எதிர்பார்க்கின்றோம்.
தரகர்களும் தொடர்புக்கொள்ளலாம்.
To Contact :
+1 647 709 1761 | +1 647 709 1536
leo.leofinance@ gmail. Com

# பாவம் தமிழ் மக்கள்!

தமிழ்ப்பொது வேட்பாளர் விடயத்தைச் சற்றுக் கிண்டலாக நீங்கள் எழுதி வருகிறீர்கள். அதைப் படிக்கும் போது மனதுக்குக் கொஞ்சம் கஸ்ரமாக உள்ளது. அதுவும் நீங்கள் அப்படி எழுதுகிறீர்கள் எனும்போது இன்னும் வருத்தமாக இருக்கிறது.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது ஒரு தரப்பினரின் அரசியல் நிலைப் பாடல்லவா! அதைச் சொல்வதற்கு அவர்களுக்கு ஜனநாயக உரிமை உண்டு. அது தொடர்பாக உங்களுக்கு மறு பார்வைகள் இருந்தால், அதை அதற்குரிய ஜனநாயகப் பண்போடு முன்வைக்கலாம். விவாதிக்கலாம். அது தானே நியாயம். அவ்வாறான விவாதத்துக்குரிய கருத்துகளையும் நியாயங்களையும் எதிர்பார்க்கிறேன்.

அதை விடுத்து, பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டையும் அதை முன்னெடுப்போரையும் கிண்டலடித்து எழுதுகிறீர்கள். அது கவலையளிக்கிறது. பொதுவாக நீங்கள் எதையும், எவரையும் மதிப்பிறக்கம் செய்யும் உள்நோக்கத்தோடு செயற்படுகின்றவரில்லை. ஆனால், இந்த விடயத்தில் உங்களுடைய எழுத்தும் தொனியும் மாறியிருப்பது ஏன்? …

இதைப் பற்றிச் சொல்ல முடியுமா?'' என்று வாட்ஸப்பில் ஒரு நண்பர் தகவல் அனுப்பிக் கேட்டிருந்தார்.

என்மீது அப்படியொரு (நல்ல) அபிப்பிராயம் அவரிடமிருப்பதையிட்டு அவருக்கு நன்றி சொன்னேன். கூடவே அவர் சுட்டிக்காட்ட விரும்பிய முறைமைக்காகவும். மிகச் சிறந்த முறையில் தன்னுடைய அபிப்பிராயத்தை உரியவாறு பொறுப்போடும் நட்புக்குரிய பண்போடும் தெரிவித்திருந்தமைக்கு அவருக்கு மீண்டும் நன்றி. இந்தப் பண்பை நாம் முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும். என்பதால் அவருடைய ஒப்புதலோடு பின்வரும் விடயங்களைப் பொது வெளியின் (அவருடைய பெயரை மட்டும் குறிப்பிடாமல்) கவனத்திற்காக எழுதுகிறேன்.

அரசியல் கொள்கைகளும் நிலைப்பாடுகளும் பல வகையானவை. ஜனநாயகச் சூழலில் இது இயல்பானதும் அங்கீகரிக்கப்பட வேண்டிதுமாகும். அதற்கப்பால் மனித வாழ்க்கையில், மானுட இருப்பில், விருப்பில் இப்படிப் பல் விருப்பங்களும் பல்நிலைச் சிந்தனைகளும் நிலைப்பாடுகளும் இருக்கும். அது இயல்பும் வழமையுமாகும். அதுதான் நியாமும் அழகும் கூட.

இதை அங்கீகரிக்க வேண்டும் என்பதே நமது நியாயமும். ஆகவே தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை ஒரு தரப்பின் அரசியல் நிலைப்பாடு, உபாய முயற்சி என ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், அதுதான் சரியானது. அற்புதமானது. அதைத் தான் தமிழ்ச்சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது தமிழ்ச் சமூகத்தை அதை நோக்கிக் குவிக்க வேண்டும். அதற்கு மாற்றான அபிப்பிராயத்தை — நிலைப்பாட்டைக் கொண்டோரெல்லாம் சூதானவர்கள், இனவிரோதிகள், தமிழர்களின் ஐக்கியத்துக்கும் விடுதலைக்கும் எதிரானோர், விடுதலை மறுப்பாளர்கள் எனச் சித்திரிக்க முற்படுவதுதான் பிரச்சினைக்குரியதாகிறது. அதாவது இனத் துரோகிகள் என்றவாறாக. இது வழமையைப் போல கறுப்பு வெள்ளை அரசியற் சிந்தனைக்குள்ளிருந்து சிந்திக்கும் — செயற்படும் போக்காகும்.

ஜனநாயகத்தைப் பற்றிப் போதிப் போரும் நவீன அரசியலைப் பற்றிப் பேசுவோரும் அதற்கு மாறாக இப்படி கறுப்பு வெள்ளை என குறுகிக் கிடப்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதில் சில முற்போக்காளர்களும் பன்மைத்துவத்தைப் பற்றிப் பேசுவோரும் அடக்கம். அவர்களுடைய தடுமாற்றத்தைப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.



கறுப்பு வெள்ளைச் சிந்தனையினால் பாதிக்கப்பட்ட அதற்குப் பெரிய விலைகளைக் கொடுத்த E.P.R.L.F, PLOT, T.E.L.O போன்றவையே இந்தச் சிந்தனைக்கு அடிமைப்பட்டிருப்பது தான் இங்கே துயரத்துக்குரியது என்பதால் தான் சில முறைகளில் சில விடயங்களைச் சொல்ல முற்பட்டேன். அது சூழலின் தன்மை, அதன் அவசியம் கருதியது. ஒரு கேலிச்சித்திரத்துக்கு (Caricature) அல்லது காட்டூனுக்கு (Cartoon) உள்ள பண்பையும் வலிமையையும் ஒத்தது. இன்னும் சொல்லப்போனால் அங்கத எழுத்து அல்லது அதொரு satiriar column எனலாம். அதை அந்த அடிப்படையில் தான் புரிந்து கொள்வது முக்கியம். அதாவது காட்டூனை ரசிப்பது, ஏற்பது என்ற மாதிரி.

எனவே இதில் ஜனநாயக மாண்பை மீறாமல், அந்தப் பண்பைக் கடைப் பிடிக்க முயன்றுள்ளேன். என்னுடைய பார்வைகளையும் நியாயங்கள், நிலைப்பாட்டையும் தெளிவாகக் கூறி வந்திருக்கிறேன். இனி —

1.தமிழ்ப்பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்குச் சொல்லப்படும் நியாயங்கள் மிகப் பலவீனமானவை. 40 ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வரும் பழைய, தோற்றுப் போன கருத்துகள். புதிதாகச் சிந்திக்க முடியாத, புதிய அரசியற் சூழலை விளங்கிக் கொள்ள முடியாத, புதிதாக அரசியலை முன்னெடுக்க இயலாத, தோல்வியிலிருந்து விடுபட முடியாத தன் வெளிப்பாடு.

அந்த இயலாமையை மறைப்பதற்குப் பூசப்படும் சலிப்பான வார்த்தைகள். இதைப்பற்றி விரிவாக விளக்கமாக எழுதியுள்ளேன். பிறரும் எழுதியுள்ளனர்.

2. அதற்கான முயற்சிகள். தமிழ்ப் பொதுவேட்பாளர் (இப்படி எழுதும் போதே ஏனோ சிரிப்பும் சலிப்பும்தான் வருகிறது மன்னித்துக் கொள்ளுங்கள்) ஒருவரை நிறுத்துவதற்கு அரசியல் ரீதியாகவும் ஆளுமை ரீதியாகவும் (ஆள் ஒருவரைத் தேடிப் பிடிப்பதற்கே படுகின்ற அல்லற்பாடுகள்) எடுக்கப்படும் முயற்சிகள் கூட சிறுபிள்ளைத் தனமானவை.

இத்தனை ஆண்டுகால போராட்ட அரசியல், அதற்கான உழைப்பு, தியாகம், கற்றுக் கொண்ட படிப்பினைகள் போன்றவற்றிலிருந்து நாம் பெற்றதென்ன? எத்தனை அரசியல் ஆளுமைகளையும் தளபதிகளையும் செயற்பாட்டாளர்களையும் கண்டிருந்தோம்.

இன்று?

மெய்யானோரும் சரியாகச் சிந்திப்போரும் உண்மையாகவே மாற்றத்துக்காக உழைப்போரும் ஓரங்கட்டப்பட்டு, நடிகர்கள் அரங்கேற்றப்பட்டுள்ளனர். அப்படியென்றால், இப்படித் தான் கிலிசை கேடாக நிலைமை இருக்கும். இப்படி நாறிப்போயிருக்கும் பலவீனத்தை மக்களுக்கும் (மேலும் மக்களுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளே நடக்கின்றன) அரசுக்கும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கும் காட்ட வேண்டுமா? நாம் பலவீனப்பட்ட நிலையில் இருக்கலாம். அதற்காக நம்முடைய வறுமையை வெளியே சொல்லித்தான் ஆக வேண்டுமா? உங்கள் வீட்டிலிருக்கும் அல்லது உங்கள் குடும்பத்துக்குள்ளிருக்கும் பலவீனமான விடயங்களைப் பகிரங்கப்படுத்துவதை விரும்புவீர்களா?

அதையெல்லாம் குடும்பக் கௌரவம், சுயமரியாதை எனக் கவனமாக மறைத்துக் கொள்வீர்கள். சமூகப் பலவீனத்தைத் தக்கமின்றிப் பறை சாற்றுவீர்கள்.

உண்மையில் இந்தக் குறைபாட்டை உணர்ந்து நாம் அதிலிருந்து மீண்டெழ வேண்டுமே தவிர, அதை எதிர்த் தரப்புப் பயன்படுத்துமளவுக்கு வாய்ப்பளிக்கவோ அனுமதிக்கவோ கூடாதல்லவா!

செயற்பாட்டு அனுபவமில்லாதவர்களின் வேலை அல்லது முயற்சிகள் இப்படித் தானிருக்கும். கள அனுபவமற்றவையாக.

3. தமிழ்ப்பொது வேட்பாளரரை நிறுத்த வேண்டும் என நிற்போர்.

இவர்கள் ஒரு முகப்பட்ட சிந்தனைக் குழாத்தினரல்ல. ஒத்த நிலைப்பாட்டைக் கொண்டோரும் அல்ல. தவிர்க்க முடியாமல் நெல்லிக்காய்களை ஒன்றாகச் சேர்த்ததைப் போல இவர்களை ஓரணியில் சேர்த்தது யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் ஊடக நிறுவனமொன்றின் இயக்குநர். இன்னொருவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் வின்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




தலைவர் திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன். இதற்கு இணை நின்றவர்கள் பத்தியெழுத்தாளர்கள் இருவர். ஏனையோர் இதில் விரும்பியும் விரும்பாமலும் உள்ளடக்கப்பட்டவர்கள்.

'உள்ளடக்கப்பட்டவர்கள்' என்று அழுத்தம் கொடுப்பதற்குக் காரணம், அவர்கள் தனிப்பட்ட உரையாடல்களில் தமது விருப்பம் வேறு. தவிர்க்க முடியாமல் நாம் இந்த நிலைப்பாட்டுக்கு சம்மதித்திருக்கிறோம் என்று தொடர்ந்து கூறுவதாகும். அப்படிக் கூறுவது அவர்களுக்கும் அவர்களுடைய அரசியலுக்கும் அழகல்ல. அது அரசியல் செயற்பாட்டுக்கு நல்லதுமல்ல. இருந்தும் அப்படித்தான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு தரப்பினரோ இந்தப் பொது வேட்பாளருக்கு மக்களிடம் ஆதரவு கிட்டவில்லை என்றால்…? தம்முடைய அரசியல் எதிர்காலம் என்ன என்ற கேள்வியும் உண்டு. குறிப்பாக ரெலோ, புளொட் ஆகியவற்றுக்கு. ஏனைய சில்லறைத்தரப்புகளுக்கு எல்லாம் ஒன்றுதான். வென்றாலென்ன? தோற்றாலென்ன? ஏதோ நமக்கும் வடையும் தேநீரும் கிடைக்கிறது.


(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120684 F**
27yrs, 5'4'' , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Director of.., Canada

**ID08120644 F**
29yrs, 5'7" , Single , Visaakam , 12 Sevai , Bachelors.. , Business Analyst.. , Canada

**ID08120662 F**
32yrs, 5'2" , Single , Pooraadam , 11 Sevai , Bachelors.. , Product Management, Canada

**ID08120637 F**
31yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Analyst , Canada

**ID08120633 F**
38yrs, 5'2" , Single , Avittam , 2 Sevai , High School , District manager , Canada

**ID08120640 F**
29yrs, 5'4" , Single , Kettai , 2 Sevai , Postgraduate.. , Social Media.. , Canada

**ID08120574 F**
24yrs, 5'3" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Clerk , Canada

**ID08120622 F**
34yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Masters Degree , development.. , Sri Lanka

**ID08120445 F**
30yrs, 5' , Single , Mrigasheersham , 5 Sevai , Bachelors.. , Registered.. , Canada

**ID08119978 F**
28yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , Bachelors.. , Manager Hospitality.. , Canada

**ID08119833 F**
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08118630 F**
30yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08120537 F**
33yrs, 5' , Divorced , Visaakam , N/A Sevai , Bachelors.. , Optometrist , Australia

**ID08120557 F**
29yrs, 5'4" , Single , Uthiraadam , N/A Sevai , Diploma , Cosmetics.., Canada

**ID08120696 F**
30yrs, 5'1" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degre , Clinical Research.. , Canada

**ID08120686 F**
32yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120681 F**
28yrs, 5'3" , Single , Mrigasheersham , 2 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120676 F**
26yrs, 5'3" , Single , Chithirai , 4 Sevai , Bachelors.. , Program Coordinator , Canada

**ID08120533 F**
51yrs, 5'1" , Single , Makam , N/A Sevai , High School , Professional.. , Sri Lanka

**ID08120620 F**
28yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Mortgage Funder.. , Canada

**ID08120610 F**
21yrs, 5'2" , Single , Revathi , N/A Sevai , Diploma , Hairstylist , Sri Lanka

**ID08119986 F**
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08115173 F**
37yrs, 5'3" , Single , Bharani , 2 Sevai , Masters Degree , Electronic.. , Sri Lanka

**ID08120390 F**
28yrs, 5'2" , Single , Poorattathi , N/A Sevai , Bachelors.. , Accountant , Canada

**ID08120572 F**
38yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Director Banking , Canada

**ID08120566 F**
40yrs, 5'3" , Divorced , Karthigai , N/A Sevai , Bachelors.. , Payroll Specialist , Canada

**ID08120567 F**
25yrs, 5'2" , Single , Aswini , 2 Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120558 F**
28yrs, 5'4" , Single , Pooram , 6 Sevai , Bachelors.. , Stundent , Sri Lanka

**ID08120565 F**
27yrs, 5'5" , Single , Thiruvaathirai , 8 Sevai , Postgraduate.. , Studies , Sri Lanka

**ID08120543 F**
42yrs, 4'8" , Seperated , Not Specified , N/A Sevai , Diploma , Houspital.. , United Kingdom



## மணமகன்

**ID08120673 M**
35yrs, 5'2'' , Single , Pooraadam, 11 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642 M**
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616 M**
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613 M**
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada

**ID08120559 M**
31yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 11 Sevai , Diploma , BUSINESS OF.. , Canada

**ID08120469 M**
35yrs, 6'1" , Single , Uthirattathi , 8 Sevai , Bachelors.. , Own business.. , Canada

**ID08113686 M**
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120335 M**
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08120598 M**
30yrs, 5'10" , Single , Moolam , 7 Sevai , Bachelors.. , Electrical. , Canada

**ID08117127 M**
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08120594 M**
30yrs, 5'11" , Single , Rohini , 9 Sevai , High School , Manager , Canada

**ID08120589 M**
36yrs, 5'5" , Single , Bharani , 9 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120690 M**
39yrs, 5'6" , Single , Swaathi , N/A Sevai , High School , Building Construction , Sri Lanka

**ID08120281 M**
28yrs, 5'11" , Single , Uthirattathi , 10 Sevai , Bachelors. , Customer Quality.. , United States

**ID08120694 M**
39yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120670 M**
30yrs, 5'11" , Single , Poosam , 12 Sevai , Diploma , Team leader , Canada

**ID08120660 M**
32yrs, 5'10" , Single , Anusham , 1 Sevai , Bachelors.. , Mortgage Specialist , Canada

**ID08120550 M**
47yrs, 5'6" , Divorced , Bharani , N/A Sevai , Bachelors.. , Own Business , Canada

**ID08120617 M**
31yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , High School , Restaurant.. , Canada

**ID08120601 M**
58yrs, 5'3" , Divorced , Poorattathi , N/A Sevai , Bachelors.. , RMT Therapist , Canada

**ID08120600 M**
31yrs, 5'8" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Mechanical.. , Qatar

**ID08120580 M**
36yrs, 5'8" , Single , Pooram , 12 Sevai , Diploma , Finance , Canada

**ID08120579 M**
30yrs, 5'11" , Single , Aswini , 6 Sevai , Masters Degree , Engineer , Canada

**ID08120402 M**
35yrs, 5'5" , Single , Uthiraadam , 2 Sevai , Diploma , A Z Truck.. , Canada

**ID08120570 M**
31yrs, 5'10" , Single , Bharani , 7 Sevai , High School , Property Supervisor , Canada

**ID08120549 M**
32yrs, 5'7" , Single , Anusham , 7 Sevai , Bachelors.. , Pharmacy Dr , Canada

**ID08120564 M**
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator , Canada

**ID08120661 M**
32yrs, 5'11" , Single , Rohini , 4 Sevai , Bachelors.. , IT Technician , Canada

**ID08120635 M**
41yrs, 5'8" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Admin IT , United States

**ID08120521 M**
31yrs, 5'11" , Single , Uthirattathi , 1 Sevai , Postgraduate.. , Grandmaall.. , Canada

# ட்ரம்பின் சொத்துப் பெறுமதியிலும் வீழ்ச்சியை ஏற்படுத்திய கமலாவின் வருகை!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது புதிய போட்டியாளரான கமலா ஹரீஸை எதிர்கொள்ள திணறி வருகிறார்.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஜோ பைடன் போட்டியிட்டபோது, 81 வயதான பைடனின் தடுமாற்றங்கள், மறதி போன்றவற்றை தூக்கிப்பிடித்து அவருக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார் 78 வயதான டொனால்ட் ட்ரம்ப்.

ஜீன்27ஆம் திகதி நடைபெற்ற பைடன் ட்ரம்ப் விவாதத்தின் போது பைடனின் செயற்பாடுகள் மிக மந்தமாக இருந்ததால் ஜனநாயகக் கட்சி பெரும் பின்னடைவை எதிர்கொண்டது. அதையடுத்து ட்ரம்பின் வெற்றி தடுக்க முடியாது என்றே பலர் கருதினர். கருத்துக் கணிப்புகளில் பைடனை விட ட்ரம்ப் முதலிடம் பெற்றிருந்தார்

ஆனால் ஜனாதிபதி தேர்தல் போட்டியிலிருந்து ஜோ பைடன் ஒதுங்கி, அக்கட்சியின் வேட்பாளராக கமலா ஹரீஸ் அறிவிக்கப்பட்ட பின்னர் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

ஜோ பைடனை விட கமலா ஹரிஸை தோற்கடிப்பது இலகுவானது என்று தான், கமலா ஹரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் ட்ரம்ப் முதலில் கூறினார்.



ஆனால், அவர் எதிர்பார்த்தவாறு கள நிலைவரம் இல்லை. கமலா ஹரிஸின் வருகையால் தனது பிரச்சாரத் திட்டத்தையே மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ட்ரம்ப்புக்கு ஏற்பட்டது.

இது குறித்து ட்ரம்ப்பும் ஆத்திரமடைந்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

பைடன் விலகி விட்டதால் அனைத்து நடவடிக்கைகளையும் மீள ஆரம்பிக்க வேண்டியுள்ளதால், பைடனுக்கு எதிரான பிரச்சாரத்துக்காக குடியரசுக் கட்சி செலவிட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் ட்ரம்ப் கூறினார்.

தனது சொந்த சமூக வலைத்தளமான ‘ட்ரூத் சோஷல்’ தளத்தில் ஜீலை 22 ஆம் திகதி ட்ரம்ப் வெளியிட்ட பதிவொன்றில், ‘நேர்மையற்ற ஜோ பைடனுக்கு எதிராக பெருமளவு நேரத்தையும் பணத்தையும் செலவிட நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். இப்போதும் நாம் அனைத்தையும் மீள ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இந்த மோசடிக்காக குடியரசுக் கட்சிக்கு பணம் மீளளிக்கப்பட வேண்டியதில்லையா?’ என ட்ரம்ப் கேள்வி எழுப்பியிருந்தார்.

### நன்கொடைகள்

பைடன் போட்டியிலிருந்து விலக வேண்டுமென வலியுறுத்தி நன்கொடை வழங்குவதை இடைநிறுத்தி வைத்திருந்த அவரின் சொந்தக் கட்சி நன்கொடையாளர்கள் கமலா ஹரிஸின் வருகையால் பெரும் உற்சாகமடைந்தனர். இதனால் 24 மணித்தியாலங்களில் 81 மில்லியன் டொலர்கள் கமலா ஹரிஸின் பிரச்சாரத்துக்கு திரட்டப்பட்டது. அதிக நன்கொடை கிடைப்பது வேட்பாளருக்கான ஆதரவு நிலையை ஊகித்துக் கொள்வதற்கான ஓர் அளவுகோலாக கருதப்படுவதும், அமெரிக்கத் தேர்தல்களின் வேட்பாளர்கள் தமக்கு கிடைத்த நன்கொடைகளை பெருமையுடன் வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஒரு காரணமாகும்.

கடந்த ஜீலை மாதத்தில் தனக்கு 138.7 மில்லியன் டொலர் நன்கொடை கிடைத்ததாக டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் பிரச்சாரக் குழு அறிவித்தது. சில தினங்களில் கமலா ஹரிஸின் பிரச்சாரக் குழு ஜீலை மாத சேகரிப்பை அறிவித்தபோது அது ட்ரம்பின் கிடைத்த தொகையை விட இரு மடங்கை விட அதிகமாக இருந்தது. ஜீலையில் 310 டொலர் கிடைத்ததாக அக்குழு அறிவித்தது.

இதில் 200 மில்லியனுக்கும் அதிகமான தொகை கமலா ஹரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்துக்குள் திரட்டப்பட்ட தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

### ட்ரம்பின் சொத்துக்களின் பெறுமதி வீழ்ச்சி

பிரச்சாரத்துக்கான நிதி திரட்டலில் கமலா ஹரிஸ் தற்போது முன்னிலையில் இருக்கும் நிலையில், அவர் ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் இறங்கிய பின் ட்ரம்பின் தனிப்பட்ட சொத்துக்களிலும் 900 மில்லியன் டொலர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றால் ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அது உண்மை.

டுவிட்டர், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் ட்ரம்புக்கு தடை விதிக்கப்பட்ட பின்னர் 2021 ஒக்டோபரில் ட்ரூத் சோஷல் எனும் டுவிட்டர் பாணி சமூக வலைத்தளத்தை ட்ரம்ப் ஸ்தாபித்தார். இதன் உரிமையாளராக ட்ரம்ப் மீடியா அன்ட் டெக்னோலஜிஸ் குரூப் எனும் நிறுவனம் உள்ளது. அந்நிறுவனத்தில் 1114.75 மில்லியன் பங்குகளை வைத்திருக்கிறார் ட்ரம்ப்.

கமலா ஹரிஸ் ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் களமிறங்கிய பின்னர், மேற்படி நிறுவனத்தில் ட்ரம்புக்குச் சொந்தமான பங்குகளின் பெறுமதி 23 சதவீதம் குறைந்து விட்டது.

ஜீலை 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பைடன் போட்டியிலிருந்து விலகியதுடன், கமலா ஹரிஸை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார். அதற்கு முந்தைய இறுதி பங்குச் சந்தை நாளான ஜீலை 19 ஆம் திகதி மேற்படி நிறுவனத்திலுள்ள ட்ரம்பின் பங்குகளின் 4 பில்லியன் டொலர்களை விட சற்று அதிகமாக இருந்தது. ஆனால், அதன்பின் அப்பங்குகளின் பெறுமதி 3.1 பில்லியன் டொலர்களாக குறைந்து விட்டது.

ஜனாதிபதியாக பதவி வகித்த போது தனது தீர்மானங்களை அறிவிப்பதற்கு டுவிட்டரை பயன்படுத்தியவர் ட்ரம்ப். அவர் ஜனாதிபதி தேர்தலில் வென்றால், ட்ரூத் சோஷல் வலைத்தளமே ஜனாதிபதியின் பிரதான தொடர்பாடல் தளமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. அதனால் மேற்படி நிறுவனதின் பங்குகளின் பெறுமதி அதிகரிக்கக் கூடும். இந்நிலையில் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாகுவாரா என்பது தொடர்பாக பங்குச்சந்தை வர்த்தகர்களின் ஒரு பந்தய விடயமாக ட்ரூத் சோஷல் நிறுவன பங்கு விலைகளின் ஏற்ற இறக்கங்கள் கருதப்படுகின்றன.

கடந்த ஜீன் இறுதியில் ஜோ பைடனின் மந்தமான விவாதத்தின் பின்னர் மேற்படி நிறுவனப் பங்குகளின் விலை தற்காலிகமாக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### உப ஜனாதிபதி வேட்பாளர்கள்

உப ஜனாதிபதி வேட்பாளர் தெரிவும் டொனால்ட் ட்ரம்புக்கு அதிகம் சாதகமாக அமையவில்லை எனக் கூறப்படுகிறது.

ஒஹையோ மாநிலத்தைச் சேர்ந்த 40 வயதான செனட்டர் ஜே.டி. வான்ஸை தனது உப ஜனாதிபதி வேட்பாளராக ஜீலை 15 ஆம் திகதி ட்ரம்ப் அறிவித்தார். செய்திருந்தார்.

ஜோ பைடனுடான போட்டியை கருத்திற் கொண்டே வான்ஸை ட்ரம்ப் தெரிவு செய்தார். ஆனால், அடுத்த ஒரு வாரத்துக்குள் தேர்தலிலிருந்து பைடன் விலகி, கமலா ஹரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் ட்ரம்பின் தந்திரோபாயங்கள் கேள்விக்குறியாகி விட்டன.



அத்துடன், ஜே.டி. வான்ஸ் புதிய வாக்காளர்களை கவரும் வகையில் இல்லை. ஏற்கெனவே உள்ள ட்ரம்பின் தீவிர ஆதரவாளர்களை மேலும் தூண்டி விடக் கூடியவராகவே வான்ஸ் உள்ளார் என விமர்சனங்கள் உள்ளன.

உதாரணமாக, நிக்கி ஹாலே போன்ற ஒருவரை உப ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் தெரிவு செய்திருந்தால் அவர் மிதவாத கொள்கையுடைய வாக்களர்களையும் கவர்ந்திருப்பார் என சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உப ஜனாதிபதி வேட்பாளர்களில் மிக மோசமான தெரிவு வான்ஸ் என ட்ரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தன்னை இனங்காட்ட விரும்பாத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

‘இக்கட்டடத்தில் எமது தரப்பிலுள்ளவர்களிடம் கேட்டால், 10 பேரில் 9 பேர் அவர் ஒரு மோசமான தெரிவு எனக் கூறுவார்கள்’ என மற்றொரு குடியரசுக் கட்சி எம்.பி. தெரிவித்துள்ளார்.

வாக்காளர்களிடம் சிறந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்த வான்ஸ் தவறியமை குறித்து ட்ரம்ப் அதிருப்தியடைந்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

மறுபுறம் கமலா ஹரிஸ் தனது உப ஜனாதிபதி வேட்பாளராக மினேசோட்டா மாநில ஆளுநர் டிம் வால்ஸை தெரிவு செய்துள்ளார். 60 வயதான டிம் வால்ஸ், இராணுவ வீரராகவும் ஆசிரியராகவும் பணியாற்றியவர். கமலா ஹரீஸ் தன்னை இந்தியராகவும் கறுப்பினத்தராகவும் அடையாளப்படுத்தும் நிலையில், வெள்ளையின வாக்காளர்களைக் கவர்வதற்கு டிம் வால்ஸ் உதவுவார் எனக் கருதப்படுகிறது.

2016ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலில் பிரச்சாரக் கூட்டங்களுக்கு ஹிலாரி கிளின்டனை விட அதிக மக்கள் பங்குபற்றும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தியவர் டொனால்ட் ட்ரம்ப். (2020ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரங்கள் கொவிட் 19 பெருந்தொற்று பரவல்காலத்தில் நடைபெற்றன. அதனால் வேட்பாளர்கள், நேரடி பிரச்சாரக் கூட்டங்களை குறைத்துக் கொண்டனர்.)

ஆனால், கடந்த வாரம் கமலா ஹரிஸூம், டிம் வால்ஸூம் பிலடெல்பியா, பீனிக்ஸ் நகரங்களில் நடத்திய பிரச்சாரக் கூட்டங்களில் 14,000 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். சுமார் ஒரு தசாப்த காலத்தில் ட்ரம்பின் பிரச்சாரக் கூட்டங்களுக்கே இவ்வாறு அதிக எண்ணிக்கையிலான மக்கள் திரள்வார்கள் என்ற அபிப்பிராயம் நிலவியது. தற்போது கமலா ஹரிஸ், டிம் வோல்ஸ் அதனையும் தகர்க்க ஆரம்பித்துள்ளனர்.

கருத்துக் கணிப்புகளிலும் தற்போது டொனால்ட் ட்ரம்ப்பை விட கமலா ஹரிஸ் முன்னிலையில் உள்ளார். ஆனால் இத்தேர்தலுக்கு இன்னும் சுமார் 3 மாதங்கள் உள்ளதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.

ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.

மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.

கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.

சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.

கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.

துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்

விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.



தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.

மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.

மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம். பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# பாவம் தமிழ் மக்கள்

(19ம் பக்கத் தொடர்ச்சி) அந்தளவே போதும் என்ற நிலைப்பாட்டோடிருக்கிறார்கள். ஆனால், ஈ.பி.ஆர்.எல். எவ் வுக்கு இந்தப்பிரச்சினை இல்லை. அது ஏற்கனவே மிகச் சிக்கலான நிலையில் தான் உள்ளது. அது முன்னிலை பெறுவதற்கான ஆயிரம் கதவுகளையும் தானாகவே அடைத்துச் சாத்திக் கொண்டு பிடிவாதமாக இருட்டறைக்குள் தியானம் செய்கிறது. ஆகவே அதற்கு வாழ்வும் சாவும் ஒன்று தான். வென்றால் இன்னொரு சுற்று ஓடலாம். இல்லையென்றாலும் ஏதோ அவ்வப்போது அரங்கில் நாமும் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்ளலாம். அவ்வளவு தான்.

சிவில் குழுவினர் (Civil society representatives) என்று தம்மை அடையாளப்படுத்துவோர் ஏனைய தரப்புகளை மறைமுகமாக ஆயுததாரிகள் (Armed parties) அல்லது துணை ஆயுதக்குழுவினர் (paramilitaries) என்ற பழைய மனப்பதிவோடு அல்லது அத்தகைய ஒரு உள்ளுணர்வோடு விலகக்கத்தோடு தான் காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்குள் தாம் கலந்து விடக் கூடாது என்ற எச்சரிக்கையை அவர்களிடம் அவதானிக்க முடிகிறது. இதனால் சற்று விலகி நின்று கொண்டே தமிழ்ச் சமூகத்தின் எதிர் காலத்துக்காக சேர்ந்து வேலை செய்கிறோம். கலந்து கொள்ளவும் கரைந்து போகவும் மாட்டோம் என்று செயற்பாடுகளால் காட்டுகின்றனர். சிவில் தரப்பும் கட்சிகளும் செய்து கொள்ளப் பட்ட உடன்படிக்கை கூட அந்த அடிப்படையிலானது தான். (பாவம் விக்னேஸ்வரன்). ஆக இப்படியான சூழலில் எப்படி இவற்றைக் குறித்துப் பேசாமலிருக்க முடியும்? அந்தளவுக்குத் தமிழ்ச் சமூகம் மொண்ணையில்லைத் தானே! பொய்களையும் மாயைகளையும் களைய வேண்டியது. இனங்காட்ட வேண்டியது. அதை உணர்ந்தறிந்தவரின் கடமை. அதைச் செய்ய முயற்சிக்கிறேன். அவ்வளவு தான். பாவம் தமிழ் மக்கள்

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை சந்தித்த

(7ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும் சஜித் பிரேமதாச தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்காக முன் னெடுக்க உள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பில் பங்கேற்பதென முடிவு செய்தனர்.

இச் சந்திப்பில், பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான சமஸ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் எட்டப்படாமல் இருப்பதனாலேயே பொது வேட்பாளர் என்ற முடிவு வலுப்பெற்றது என்பது தெளிவு படுத்தப்பட்டது.

இதுவரை காலமும் தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் இம்முறை அச்சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தான் முடிவு காண்பதாக தெரிவித்தார். ஆகவே கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் வைத்துக் கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளை பெற்றுக் கொண்டவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு சகல உரிமையும் இருக்கின்றது என்பதையும் அதைத் தான் மதிப்பதாகவும் தெரிவித்த அவர் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உங்களுடைய நிலைப்பாட்டுக்கு தான் மதிப்பளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனாலும் தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மத மற்றும் பிரதேச ரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்கள் முன்னிலைப் படுத்துவது ஒற்றுமையை சீர்குலைக்கலாம் என்றும் கருத்து தெரிவித்தார். அவரைப் பொறுத்தவரை முதல் கட்டமாக பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டு வரப் பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் தயாராக உள்ளேன் என தெரிவித்தார். அதற்காக தான் வெளிப்படையாகவும் பேசி வருவதாகவும் யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளை சொல்வது இல்லை என்றும் தெரிவித்தார். இவ்விடயத்தில் தான் உறுதியாக இருப்பதாகவும் ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப் படுத்துவதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இப்படியான பிரச்சினைகளுக்கு தான் சிறப்புப் பணிக் குழுக்களை அமைத்து தனது நேரடி மேற்பார்வையின் கீழ் பிரச்சனைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்தார்.

தான் இலங்கையில் உள்ள அனைத்து இனங்களையும் அனைத்து மதங்களையும் நேசிப்பவன் என்றும் தான் ஒரு இனவாதி அல்ல என்பதையும் தமிழ் மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே வரும் தேர்தலிலே தனக்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவருடைய கருத்துக்களை பரிசீலித்து மற்றவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்துவதாக தமிழர் தரப்பில் தெரிவித்ததுடன் சந்திப்பு முடிவு பெற்றது.

மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாக வெளியாகும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
23 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் eelanadu.ca என்ற மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# SASITHARAN LAW

PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**

*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**

*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6

Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# நாங்கள் யாரை ஆதரிப்போம் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை! அதற்கு இன்னமும் கால அவகாசம் இருக்கிறது என்கிறார் சுமந்திரன்!

நாங்கள் யாரை ஆதரிப்போம் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஆ. சுமந்திரன் தெரிவித்தார்.

14 ஆகஸ்ட் 2024 புதன்ிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்



இன்று ஜனாதிபதி 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான விடயங்களை பலருடன் பேசிக் கொண்டு வருகிறார். 2022 ஆம் டிசம்பர் சகல கட்சிகளுடன் பேச்சு வார்த்தை ஆரம்பித்த போது நான் அவருக்கு வழங்கிய ஆவணத்தில் இருந்து தொடர்ச்சியாக பல ஆவணங்கள் கை மாற்றப்பட்டு இப்பொழுது அவர் ஒரு ஆவணத்தை வழங்கியுள்ளார்.

நேற்றைய தினம் அல்லது நேற்றைய முன்தினம் அதே ஆவணங்களை வேறு சில தமிழ் கட்சிகளுக்கும் வழங்கியுள்ளார். எங்களது கட்சி தலைவரிடமும் அதை பகிர்ந்துள்ளார். காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது தொடர்பாக அவரது பிரேரணையை நாங்கள் பார்த்து இருக்கின்றோம் அதன் குறைப்பாடுகளை நான் சுட்டிக்காட்டியுள்ளேன். தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு சில நாட்கள் காணப்படுகின்றமையால் பல விடயங்கள் இங்கே செய்ய முடியமால் இருக்கும். தேர்தல் வருகின்ற காரணத்தினால் தான் இதை செய்கிறார். இல்லையென்றால் வாக்குகளைப் பெறுவதற்காக அனைவரும் 13 ஆவது திருத்த சட்டத்தை பற்றி இவ்வாறு விவாதிக்கின்றனர். ஆனால் வாக்கு கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் பரவாயில்லை, தமிழ் மக்கள் காலங்காலமாக காத்திருக்கிறார்கள், அதன்படி நடந்து கொண்டால் அதுதான் எமக்கு வேண்டும். நாங்கள் யாரை ஆதரிப்போம் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அதற்கு இன்னுமும் கால அவகாசம் இருக்கிறது செப்டம்பர் 20 ஆம் திகதி நாங்கள் தெரிவித்தால் கூட மக்களுக்கு வாக்களிக்க தெரியும் என தெரிவித்தார்.

## தமிழர்களுக்கு சங்கு தான்

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் போட்டியிடவுள்ளார். தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் மற்றும் சமூக மட்ட சிவில் அமைப்புகள் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி, இந்த பொது வேட்பாளரை களமிறக்குகின்றன.

அந்த வகையில் தமிழ் பொது வேட்பாளர் ப.அஅரியநேத்திரனின் நியமனப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக தமிழ் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது. அத்துடன் அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற சின்னம் சங்கு என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க அநுராதபுரத்தில் நடைபெற உள்ள முதலாவது பொது கூட்டத்தில் ராஜபக்ச குடும்பத்தில் உள்ள ஒரு உறுப்பினர் மேடையேற உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார். தனியார் யூ டியூப் நிகழ்ச்சியொன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச களமிறங்கியுள்ள பின்புலத்தில் அவர்களது குடும்பத்தில் பிளவுகள் ஏற்பட்டால் அது நாமல் ராஜபக்சவின் வாக்குகளில் மேலும் சரிவை ஏற்படுத்தும் என அக்கட்சிக்குள் பேசப்படுகிறது.





10th Annual
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
EXPECTED ATTENDEES
300, 000 +
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
FREE ADMISSION
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
PROUDLY HOSTED BY
SUPPORTED BY
Canada
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
Booth Inquiries:
info@canadiantamilcongress.ca
416.240.0078
tamilfest.ca
@TamilFest